
www.malankaralibrary.com



www.malankaralibrary.com

# மலங்கரை துளிகள்

## விழாக்கள் வரலாற்றுப் பார்வையில்

**அருட்தந்தை மரிய ஜாண்**

**மார்த்தாண்டம்**

**Ã.ü.ÀìÃ..ÃÀ**

## நூல் விபரம்

நூலின் பெயர் : மலங்கரை துளிகள்: விழாக்கள் வரலாற்றுப் பார்வையில்

www.malankaralibrary.com

நூலின் வகை : விளக்கவுரைகள்

நூலாசிரியர் : அருட்தந்தை மரிய ஜாண்

உரிமை : ஆசிரியருக்கே

வெளியிடுவோர் : தனிச்சுற்று

முதற்பதிப்பு, பிரதிகள் : 20.01.2021, 100

நூல் அளவு : A4

எழுத்துரு : Latha, 11 புள்ளி

நூலாசிரியர் முகவரி : ஆயர் இல்லம்,
வெட்டுவெந்நி, மார்த்தாண்டம் கன்னியாகுமரி
மாவட்டம், தமிழ்நாடு - 629 165.

அலைபேசி : 00 49 15 75 700 77 61

மின்னஞ்சல் : frmariajohn@gmail.com

## எனதுரை

„மலங்கரை துளிகள்: விழாக்கள் வரலாற்றுப் பார்வையில்“ என்னும் நூலை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மிகவும் மகிழ்கிறேன். மலங்கரை கத்தோலிக்க திருவழிபாட்டில் பல்வேறு திருவிழாக்களை

www.malankaralibrary.com

கொண்டாடுகின்றோம். பல்வேறு தூயவர்களின் நினைவு நாள்களையும் கொண்டாடுகின்றோம். இவற்றைப் பற்றிய அறிவுத்தேடல் திருச்சபையின் மறையுண்மைகளை தேடும் பணிக்கு இணையானதாகும்.

நற்செய்தியை மையப்படுத்திய உரைகளை மறையுரைகளாக நாம் ஆலயத்தில் நிகழ்த்துகிறோம். அஃதுடன் திருச்சபையின் திருநாள்களையும் அவற்றின் தெளிவான கண்ணோட்டத்தை பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக அந்தந்த கருத்துக்களின் வரலாற்றுப் பின்னணியையும் அவை உருவான காரணங்களையும் எடுத்துக் கூறுகின்ற போது விசுவாசிகளால் அவற்றின் அர்த்தங்களை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. இத்தகைய சில விழாக்களையும் புனிதர்களின் தினங்களையும் வரலாற்று கருத்துக்களோடு மறையுரை வடிவில் சுருக்கமாக வெளிப்படுத்த முனைந்துள்ளேன். இந்நூல் வரலாற்று நூலல்ல. வரலாற்றுச் சிதறல்களும், மலங்கரையின் கருத்துச் சிதறல்களும் சின்னத் துளியாக அடங்கிய

www.malankaralibrary.com

நூலாகும். கிறிஸ்துவின் மறையுண்மைகளை அறிந்திட இந்நூல் உதவியாக அமையும்.

அருட்தந்தை மரிய ஜாண்

**உள்ளடக்கம்**


**Àüகிறிஸ்து பிறப்புத் திருநாள்**

**2. திருச்சிலுவைத் திருநாள்**

**Õüகிறிஸ்து அரசர் திருநாள்**

**ÜEஅனைத்து இறந்தவர்கள் தினம்**

**ஷ்இறுதித் தீர்ப்பு தினம்**

**–ப்வானதூதர்களின் தினம்**

**—ப்திருச்சபையின் புதுதாக்க தினம்**

**“ப்சக்கரியாவுக்கு தூதறிவித்தல் தினம்**

**”ப்தூய பெரிய யாக்கோபின் தினம்**

**À.ப்தூய ஸ்தேவான் தினம்**

www.malankaralibrary.com

**ÀÀü்தூய நிக்கோலஸ் தினம்**

**ÀÃü்தூய ஜாண் மரிய வியானியின் தினம்**

## 1. கிறிஸ்து பிறப்புத் திருநாள்

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, பல நாட்களாக எதிர்பார்த்து பல்வேறு அலங்காரங்கள் வழியாகவும் ஆன்மீகத் தயாரிப்புகளுடனும் நாம் நம்மையே தயாரித்துக் கொண்டு இன்றைய நாளில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்புத் திருநாளை விழாவாகக் கொண்டாடுகின்றோம். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்புத் திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### கிறிஸ்துமஸ் பெயர்க் காரணம் என்ன?

ஆண்டவரின் பிறப்புத் திருநாளை ஆங்கில மொழியில் „கிறிஸ்துமஸ்“ என்று நாம் கூறுகின்றோம். இந்த கிறிஸ்துமஸ் என்ற சொல் தான் உலகின் பல மொழிகளிலும்

www.malankaralibrary.com

மொழிபெயர்க்கப்படாமல் அதே சொல்லால் ஆண்டவரின் பிறப்பு விழாவை குறிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாமும் நம் தமிழ் மொழியிலும் இச்சொல்லையே பயன்படுத்தி வருகிறோம்.

ஒரு சில மொழிகளில் கிறிஸ்துமஸ் என்பதை „தூய்மையான இரவு“ அல்லது „அருள் நிலைப்படுத்தப்பட்ட இரவு“ என்ற அர்த்தத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக ஜெர்மன் மொழியில் கிறிஸ்துமஸ் என்பதற்கு „புனித இரவு“ என்ற அர்த்தத்தில் „வைனாக்டன்“ என்ற சொல்லானது பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொதுவாக அனைத்து மொழிகளிலும் கிறிஸ்துமஸ் என்பதற்கு இணையான சொல் தான் ஆண்டவரின் பிறப்பு விழாவுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த கிறிஸ்மஸ் என்ற சொல்லானது இரண்டு சொற்களால் உருவான ஒரு இணைப்புச் சொல்லாகும். „கிறிஸ்து“ மற்றும் „மாஸ்“ என்ற இரண்டு ஆங்கிலச் சொற்களின் இணைப்பு ஆகும். பொதுவாக „கிறிஸ்து“ என்ற சொல்லே அனைத்து மொழியிலும் கிறிஸ்து


www.malankaralibrary.com

என்பதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இலத்தீன் மொழியில் „மீச" என்ற சொல்லானது பலி செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த மீச என்ற சொல்லுக்கு இணையாக ஆங்கிலத்தில் „மாஸ்" என்ற சொல் பலி செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்து பிறப்புத் திருநாளன்று நடைபெற்ற திருப்பலியைக் குறிப்பிட இப்பெயர் பயன்படுத்தப்பட்டது. பின்னர் கிறிஸ்து பிறப்புத் திருநாளையே கிறிஸ்துமஸ் என அழைக்கத் துவங்கினர்.

### எக்ஸ்மஸ் (X Mas) என்பது சரியானதா?

கிறிஸ்து என்ற சொல் கிரேக்க மொழிச் சொல்லான „கிறிஸ்தோஸ்" (Χριστός) என்பதிலிருந்து தான் உருவானது. கிரேக்க மொழியின் தனித்தன்மையாக பல்வேறு குறியீடுகளை சொற்களைக் குறிப்பிட பயன்படுத்தி வருகின்றனர். அவ்வாறு கிறிஸ்துவை குறிப்பதற்கு கிரேக்க மொழியில் உள்ள எக்ஸ் X (உச்சரிப்பு க்) மற்றும் பி P (உச்சரிப்பு று) என்ற இரண்டு சொற்களையும்

அவர்களுடைய உச்சரிப்புக்கு ஏற்ப பயன்படுத்தி வந்தார்கள். நாளடைவில் இஃது கிறிஸ்துவை குறிப்பிடும் குறியீடாக எளிதில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.



மதத்துன்புறுத்தல்களின் காலத்தில் கிறிஸ்தவர்களை குறிப்பிடுவதற்காக „X „ என்ற கிரேக்க எழுத்தை இரகசியக் குறியீடாக பயன்படுத்தினர். அவ்வாறு எக்ஸ் (X) என்ற குறியீடு கிறிஸ்துவைக் குறிப்பிட பிற்காலங்களில் பயன்படுத்தப்பட்டது. எனவே ஆங்கிலத்தில் நாம் X΄mas என்று குறியீட்டாக எழுதுகிறோம். இதனை எக்ஸ்மஸ் என வாசிப்பது தவறானது. அதனை வாசிக்கின்ற போது கிறிஸ்துமஸ் என்றே

www.malankaralibrary.com

வாசிக்க வேண்டும். அதாவது + என்ற குறியீட்டை கூட்டல் எனவே வாசிக்கிறோம்.

**அமைதியான நல்லிரவில் (Silent Night) பாடலின் மூலம் என்ன?**

மேலும் கிறிஸ்துமஸ் திருவிழா என்றாலே நம் அனைவருக்கும் நினைவில் வருவது „சைலன்ட் நைட்" என்ற ஒரு பாடலாகும். யுனெஸ்கோ என்ற நிறுவனமானது பாரம்பரிய முக்கியத்துவம் பெற்ற ஒரு பாடலாக இதனை அங்கீகரித்து போற்றி வருகிறது. தற்போது இந்தப் பாடலானது 150க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு கிறிஸ்துமஸ் திருநாளன்று கிறிஸ்தவர்கள் அனைவராலும் பாடப்பட்டு வருகிறது. இப்பாடலை தமிழ்மொழியில் பல்வேறு விதங்களில் மொழிபெயர்த்துள்ளனர். „மௌனமாய் ஓர் நிசி"ப் „ஒப்பிலா திரு இரா"ப் „அமைதியான நல்லிரவில்" என பல்வேறு வடிவங்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இதன் மூலமொழியான ஜெர்மன் மொழியில் பாடக் கேட்பது மிகவும் அருமையானதாகும்.

www.malankaralibrary.com

ஆஸ்திரிய நாட்டைச் சார்ந்த அருட்தந்தை „ஜோசப் மோர்“ என்பவர் 1816 ஆம் ஆண்டில் இப்பாடலை எழுதினார். ஈராண்டுகளுக்கு பிறகு தான் எழுதிய கவிதைக்கு இசை வடிவம் கொடுக்க விரும்பிய அவர் தனது மிகவும் நெருக்கமான ஆர்கன் இசை வாசிப்பாளரான „பிரான்ஸ் சாவர் குரூபர்“ என்பவரிடம் ஒப்படைத்தார். À“ À“ ல் பிரான்ஸ் சாவர் குரூபர் இப்பாடலுக்கு இசையமைத்து இன்று உலகமே போற்றிட தொடக்கமிட்டார். கிறிஸ்துமஸ் நாளன்று இப்பாடலை பாடாத கிறிஸ்தவர்களே இல்லை எனலாம். இதனை பாடுதல் மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வாக குடும்பங்களிலும் ஆலயங்களிலும் கருதப்படுகிறது.

## கிறிஸ்துமஸ் மரம் என்றால் என்ன?

கிறிஸ்துமஸ் விழாக்களில் கிறிஸ்துமஸ் மரம் ஆனது மிக முக்கிய இடத்தை கொண்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவர்கள் தங்களுடைய வீடுகளுக்குள் கிறிஸ்துமஸ் மரம் ஒன்றை நடச் செய்து பல்வேறு விதமான பரிசுகளை தொங்க விடுகின்றனர். குளிர்காலத்திலும்

www.malankaralibrary.com

பசுமையான கூர்மையான இலைகளுடன் காணப்படுகின்ற பைன் மரத்தினுடைய கிளையை வெட்டி கிறிஸ்துமஸ் மரமாக பயன்படுத்துகிறார்கள். ஒரு சிலர் தங்களுடைய வீட்டுத் தோட்டத்தில் வளர்ந்து வரும் இத்தகைய பைன் மரத்தையே கிறிஸ்துமஸ் மரமாக பயன்படுத்தி வருகிறார்கள். ஜெர்மனி நாட்டில் தான் இத்தகைய கிறிஸ்துமஸ் மரம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது என்பது முக்கியமானதாகும்.

ஜெர்மனி நாட்டில் சுமார் 1000 வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த புனித போனிபஸ் மறைபணியாற்றுவதற்காக வந்தபோது ஜெர்மானியர்கள் ஓக் மரம் ஒன்றை வளரச் செய்து அதனை இறைவனாக வழிபட்டு வந்தனர். ஜெர்மானியர்கள் வழிபாட்டுப் பொருட்களையும் நேர்ச்சைப் பொருட்களையும் இம்மரத்திற்கு காணிக்கையாக சமர்ப்பித்து அதனை வழிபட்டு வந்தார்கள். புனித போனிஃபாஸ் ஜெர்மானிய அரசருடன் பேச்சுவார்த்தை நடத்தி கிறிஸ்தவமே உண்மையான மதம் கிறிஸ்துவே உயிர் உள்ளவர் என்பதை நிரூபிப்பதற்காக இம்மரத்தை வெட்டி வீழ்த்த அரசிடமிருந்து அனுமதியை பெற்றுக்

www.malankaralibrary.com

கொண்டார். தன்னுடைய உடன் பணியாளர்களுடன் மரத்தை முழுவதுமாக வெட்டி வீழ்த்தப்பட்ட பின்னர் அதே இடத்திலிருந்து பைன் மரம் ஒன்று தானாக வளர்ந்து வந்ததாக நம்பப்படுகிறது. இம்மரத்தை கிறிஸ்துமஸ் மரம் என பெயரிட்டு அன்று முதல் அழைக்கத் தொடங்கினர்.

இன்று ஜெர்மானியர்களின் வாழ்வில் கிறிஸ்துமஸ் மரம் இல்லாத கிறிஸ்துமஸ் விழாவே இல்லை என கூறமுடியும். கிறிஸ்துமஸ் மரத்தை தங்களுடைய வீட்டறைக்குள் நடச்செய்து பரிசுகளை தொங்கவிட்டு குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக இம்மரத்தை சுற்றி அமர்ந்து பாடல்கள் பாடி பரிசுகளை பெற்று கிறிஸ்துமஸ் விழாவை வெகு விமரிசையாக கொண்டாடி மகிழ்ந்து வருகின்றனர்.

## திருவழிபாடுகளில் கிறிஸ்துமஸ்

கிறிஸ்துமஸ் திருநாளின் சிறப்பு திருவழிபாட்டு நிகழ்வுகள் அனைத்தும் டிசம்பர் 24ஆம் நாள் மாலையில் ஆரம்பமாகும். நம் மலங்கரை கத்தோலிக்க திருவழிபாட்டின் படியாக கிறிஸ்து பிறப்பு திருவழிபாட்டு நிகழ்வுகள் மாலை செபம், துயில் முன் செபம், இரவு செபம், தீவலத்

திருச்சடங்கு மற்றும் திருப்பலி போன்ற பகுதிகளாக நடத்தப்படுகின்றன. இந்த திருச்சடங்குகளில் பயன்படுத்துகின்ற விவிலிய வாசகங்கள் மற்றும் ஜெபங்களை மையமாகக் கொண்டு கிறிஸ்து பிறப்பை பற்றிய பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளையும் விண்ணக மற்றும் மண்ணோரின் மகிழ்வினையும் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. தொடர்ந்து திருப்பலியின் போது ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம் உள்ளத்தில் தோன்ற வேண்டியதன் உணர்வை நாம் நினைவு கூறுகின்றோம்.

**மகிழ்வின் திருநாள்:** கிறிஸ்துவின் பிறப்பு பல்வேறு சவால்களை சந்தித்த பின்னர் திருக்குடும்பத்திற்கும் இந்த உலகத்திற்கும் மிகப்பெரிய ஒரு மகிழ்வை கொண்டுவந்தது.

**பகிர்வின் திருநாள்:** கிறிஸ்து பிறந்தார் என்ற செய்தியை அறிந்த அனைவரும் கீழ்த்திசை அறிஞர்களும் இடையர்களும் வானதூதர்களும் தாங்கள் அறிந்த செய்திகளை பிறருக்கு பகிர்ந்தளித்து தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தினர்.

நமது வாழ்வில் வஞ்சனை, அமைதியின்மை போன்ற எதிர்வினைகள்

இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்ற போது தான் மகிழ்வு ஏற்படுகின்றது. இந்த எதிர்வினைகள் அனைத்தும் நம் வாழ்வில் இருந்து மறைந்து போக சமாதான மன்றாட்டின் போது போது நாம் இன்றைய நாளில் மன்றாடுகின்றோம். புறுமியோன் செதறா மன்றாட்டின் போது மிக உயர்ந்த உன்னத நிலையில் உள்ளவர் தம்மையே பகிர்ந்தளித்து எளியவரானார் என்பதைப்பற்றி நாம் ஜெபிக்க முடிகின்றது. இறுதியில் பாடக்கூடிய ஹூத்தோமோ பாடலின் போது மகிழ்வு மற்றும் பகிர்தல் என்ற இரண்டு நிலைகள் வருகின்ற போது இறைமயம் எவ்வாறு இந்த உலகத்திற்கு வருகிறது என்பது தெளிவாக சுட்டிக் காட்டப்படுகிறது.

நம்முடைய வாழ்வில் நம் குடும்பங்களில் இத்திருநாளைக் கொண்டாடுகின்ற போது பல்வேறு பணிகளின் நிமித்தமாக நம் மனதில் இருக்கக்கூடிய உளைச்சல்களையும் துயரங்களையும் மறந்து விட்டு மகிழ்வின் திருநாளாக இத்திருநாளை கொண்டாட

வாழ்த்துகிறேன். எவ்வாறு கிறிஸ்து இந்த உலகத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டாரோ அவ்வாறே நாமும் இந்த உலகத்திற்கு நம்மை சார்ந்து வாழ்வோருக்கும் நம் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் நம்மால் இயன்ற நிலைகளில் பகிர்ந்து வாழ முயல்வோம். அவ்வாறு மகிழ்வின் திருநாளாகவும் பகிர்தலின் திருநாளாகவும் இத்திருநாளை நாம் அனைவரும் கொண்டாடி மகிழ்வோம்.

## 2. திருச்சிலுவைத் திருநாள்

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே திருச்சபைத் தாய் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 14ஆம் நாள் திருச்சிலுவைத் திருநாளாக கொண்டாடி மகிழ்ந்து வருகின்றது. திருச்சபை மரபில் கிறிஸ்துவுக்குப் பின் 326 ஆம் ஆண்டில் உரோமைப் பேரரசர் பெரிய கான்ஸ்டன்டைனின் தாயார் புனித ஹெலனா அரசியார் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அறைந்த சிலுவையை கண்டெடுத்து அதை

www.malankaralibrary.com

எருசலேமில் நிலைநிறுத்திய நாளை திருச்சிலுவைத் திருநாளாக கொண்டாடுகிறோம். அன்றைய நாளில் இருந்து இந்த திருச்சிலுவையை நோக்கிய புனிதமான திருப்பயணம் கிறிஸ்தவர்கள் மேற்கொண்டதாகவும் திருச்சபை வரலாறு கற்பிக்கிறது.

மேலும் திருச்சிலுவையின் பெயர்களில் பல்வேறு விழாக்கள் கிறிஸ்தவ திருச்சபைகளில் கொண்டாடப்பட்டு வருகின்றன. திருச்சிலுவையின் பெயரில் ஏராளமான துறவற சமூகங்களும் உள்ளன. திருச்சிலுவையின் சாதாரண வடிவம் நான்கு முனைகளை கொண்டதாக இருந்தாலும் ஒவ்வொரு இடத்து கலாச்சார சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு விதமான வடிவங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக திருத்தூதர் மார்தோமா சிலுவை என்பது மூன்று முனைகள் அலங்கார முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. திருத்தூதர் யாக்கோபு சிலுவையானது ஒன்று பக்கங்கள் முனைகள் ஒரே மாதிரியும் கீழ்நோக்கிய ஒருமுனை அம்பைப் போன்றும்

www.malankaralibrary.com

அமைந்திருக்கும். இவ்வாறு பலவிதமான சிலுவைகளை நாமும் நம்முடைய வாழ்க்கையில் கண்டிருக்கின்றோம்.

திருச்சிலுவை கிறிஸ்தவ மதம் சார்ந்த ஒரு அடையாளமாகவும் அலங்கார வடிவமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக கிறிஸ்தவத்தையே சுட்டிக் காட்டக்கூடிய அடையாளமாகவே திருச்சிலுவை அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இடைக்கால திருச்சபையில் கிழக்குத் திருச்சபைகளும் மேற்குத் திருச்சபைகளும் போராடிய மிகப்பெரிய வாக்கு போர் நடைபெற்று வந்தது. மேற்குத் திருச்சபையினர் சிலுவைகள், இயேசுகிறிஸ்து, மரியா மற்றும் புனிதர்கள் போன்றவர்களின் சிலை வடிவங்களையும் செதுக்கி பயன்படுத்தியபோது கிழக்குத் திருச்சபையினர் முக்கியமாக ஆர்த்தடாக்ஸ் திருச்சபையினர் பல்வேறு அர்த்தங்கள் கொண்டவாறு வரையப்பட்ட ஓவியங்களை ஆலயங்களில் பயன்படுத்தினர். நாளடைவில்

www.malankaralibrary.com

இத்தகைய ஓவியங்கள் திருச்சபை முழுவதும் பயன்படுத்தலாயின.

மேலும் ஐகன் என்பதற்கு மதம் சார்ந்த அர்த்தங்கள் கொண்ட வரைபடங்கள் என்பது பொருளாகும். கிழக்கு திருச்சபைகளில் ஐகன் என்ற சொல்லானது அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச்சொல் கிரேக்க மொழியில் இருந்து வந்ததாகும். கிரேக்கர்கள் ஐகன் என்பதற்கு மதம் சார்ந்த கலை வடிவம் என்றும் அழகான வரைபடங்கள் என்றும் பொருள் கொள்கின்றனர்.

இவ்வாறாக வரையப்பட்ட ஒரு பொருள் செறிந்த சிலுவையை தான் நாமும் நம்முடைய பல மலங்கரை ஆலயங்களிலும் பயன்படுத்தி வருகிறோம். ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக அனைத்து ஆலயங்களிலும் இவ்வாறு வரையப்பட்ட ஐகன் எனப்படும் திருச்சிலுவையைக் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற நிலை இருந்து வந்தது. ஆனால் அஃது முழுமையற்ற நிலையில் கிறிஸ்துவின் உருவம் மட்டுமே வரைந்தவாறு பயன்படுத்தப்பட்டு வந்தது.

www.malankaralibrary.com

ஆனால் பல்வேறு கால சூழ்நிலைக்கு உள்பட்டு இந்த ஐகன் படத்திற்கு பதிலாக பல்வேறு இயேசுவின் வரைபடங்கள் நம்முடைய ஆலயங்களில் வரையப்பட்டுள்ளன. இருப்பினும் நம்மிடையே பல ஆலயங்களிலும் மிக முக்கியமாக இச்சிலுவை தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற போது அதனுடைய உட்பொருளை அறிந்திட நாம் கட்டாயமாக முயன்றிடல் வேண்டும்.

முழுமையான இத்திருச்சிலுவை புனித டாமியன் திருச்சிலுவை எனப்படுகிறது. புனித பிரான்சிஸ் அசிசியார் தனது வாழ்வைத் துறந்து தன்னை இறைவனுக்காக சமர்ப்பிப்பதற்கு பெற்றுக்கொண்ட திருக்காட்சி இத்தாலி நாட்டின் அசிசி நகருக்கு அருகே அமைந்துள்ள டாமியானா என்ற சிற்றாலயத்தில் வைத்து பெறப்பட்டது. அந்த ஆலயம் பாழடைந்து கிடந்ததாகவும் அதனை சீர்செய்ய வேண்டும் என்றும் ஆண்டவரின் திருக்காட்சி அவருக்கு அளிக்கப்பட்டது. இந்த பழமையான ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த திருச்சிலுவையே புனித

www.malankaralibrary.com

டாமியன் திருச்சிலுவை எனப்படுகிறது. இந்த புனித டாமியானா திருச்சிலுவையைக் தான் நாம் நமது ஆலயங்களில் மலங்கரை கத்தோலிக்க ஆலயங்களில் பயன்படுத்தி வருகிறோம்.

இந்த புனித டாமியானா திருச்சிலுவையில் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவாறும் திருச்சபையின் பல்வேறு புனிதர்களும் வானதூதர்கள் உள்பட பல நபர்கள் பல்வேறு உயர வடிவமைப்பில் நிற்க கூடியதாகவும் இந்த ஓவியமானது வரையப்பட்டுள்ளது. இந்த டாமியானா திருச்சிலுவையை வரைந்த ஓவியரின் பெயர் எங்குமே குறிப்பிடப்படவில்லை ஆனால் அதனுடைய பழமைத் தன்மையை ஆராய்ந்த போது 12ஆம் நூற்றாண்டில் வரையப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. கிழக்கு ஆர்த்தடாக்ஸ் திருச்சபையில் இருந்து தான் இத்தாலியில் இந்த திருச்சிலுவையானது கொண்டுவரப்பட்டு அமைக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. மத்திய இத்தாலியில்

இச்சிலுவை 12 ஆம் நூற்றாண்டில் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திருச்சிலுவையின் வெளிப்பகுதியில் சிப்பிகள் போன்ற வடிவமானது வரையப்பட்டிருக்கின்றன. சிப்பிகள் காலை நேரத்தில் சூரியன் உதயமாகும் நேரத்தில் கடலின் மேல் பகுதியில் வந்து தங்களுடைய உடம்பிலிருந்து முத்துக்களை வெளிக்காட்டுகின்றன. இந்த நிகழ்வானது ஆண்டவர் இயேசு கிறிஸ்து உயிர்ப்பு தினத்தின் காலை நேரத்தில் உயிர்த்தெழுந்த நிகழ்வை எடுத்துக் காட்டுகின்றன. இந்த சிப்பிகள் வெளிப்பகுதியில் காணப்பட்டாலும் கீழ்ப்பகுதியில் இந்த சிற்பிகள் வரைய படாமலேயே காணப்படுகிறது.

இயேசுவின் தலைக்கு மேல்பகுதியில் இயேசுகிறிஸ்து விண்ணேற்றம் அடைந்த நிகழ்வானது வரையப்பட்டுள்ளது தன்னுடைய கைகளில் சிலுவையை தாங்கியவாறு சிலுவை என்னும் துன்பங்களை எல்லாம் தாங்கிக்கொண்டு துன்பங்களில் இருந்து விடுபட்டு வானதூதர்களோடு விண்ணரசுக்கு

www.malankaralibrary.com

விண்ணேற்றம் அடைந்த நிகழ்வை சுட்டிக்காட்டும் முறையில் வரையப்பட்டுள்ளது.

அவற்றுக்கும் மேற்பகுதியில் தந்தையாகிய கடவுளின் வலக்கரம் மேல் பகுதியில் ஆசீர்வதிப்பது போன்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வரைபடத்திற்குள் இயேசுகிறிஸ்துவின் உருவமானது மிகப்பெரிய ஒரு உருவமாக வரையப்பட்டுள்ளது. தெளிவாக அனைவரும் அறிந்து கொள்ளக்கூடிய விதத்தில் இதனை நம்மால் காணமுடிகின்றது. இந்த இயேசுவின் திருப்படமானது இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் சிலுவை மரணத்தையும் சிறப்பாக நினைவூட்டுகின்றது. மேலும் இயேசு கிறிஸ்துவினுடைய படத்திற்கு மேல் பகுதியில் இலத்தீன் மொழியில் நாசரேத்து இயேசு யூதர்களின் அரசர் என்று கிரேக்க மொழியிலும் லத்தீன் மொழியிலும் எழுதப்பட்டுள்ளன.

www.malankaralibrary.com

யூதர்கள் முள்ளால் தயாரித்து அணிவித்த முள் கிரீடம் இந்த படத்தில் காணப்படவில்லை. ஆனால் அவரது உடல் முழுவதும் ஒளிர்ந்து கொண்டிருக்க கூடிய விதத்தில் வரையப்பட்டுள்ளது. தலைப் பகுதியானது ஒரு வட்ட வடிவிலான ஒளி வடிவம் கொண்டுள்ளது. இந்த வட்ட வடிவ ஒளி அமைப்பானது எவ்வாறு முட்கிரீடம் மறைக்கப்பட்டு இருக்கின்றதோ அவ்வாறே நமது வாழ்வில் ஏற்படக்கூடிய துன்பங்களும் கிறிஸ்துவை நம்புவதால் ஒளி மிகுந்த ஆசீர்வாதங்கள் ஆக மாற்றப்படும் என்பது எடுத்துக் காட்டப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவினுடைய உருவ வடிவமைப்பில் முக வடிவமைப்பு அவரது கண்களும் நம் ஒவ்வொருவரையும் எப்போதும் கவனித்துக் கொண்டிருக்க கூடிய ஒரு நிலை எடுத்துக் காட்டப்படுகின்றது.

அவரது ஆணிகளால் அறையப்பட்ட இரண்டு கரங்களில் இருந்தும் காயத்திலிருந்து வழிந்தோடிய திரு ரத்தமானது உலகம் முழுவதையும் நனைத்து மீட்டு இருக்கின்றது என்பதை

www.malankaralibrary.com

காண்பிப்பதற்காக தான் கூடுதலான பகுதியிலும் இந்த சிவப்பு நிறமானது காட்டப்பட்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் இரு கரங்களுக்கு அப்பால் வானதூதர்கள் காணப்படுகின்றார்கள். அந்த இரண்டு வானதூதர்களும் இயேசு உயிருடன் எழுப்பப்பட்ட பின்னர் வெற்றிடமாக இருந்த கல்லறையை காவல் காத்த வானதூதர்கள் என்ற முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மேலும் இயேசு கிறிஸ்துவின் கால் பகுதியானது ஒரு அடித்தளத்தின் மேல் வரையப்பட்டுள்ளது. இந்த அடித்தளம் இயேசு கிறிஸ்துவே திருச்சபையின் மூலைக்கல் என்ற ஒரு கருத்தை வெளிப்படுத்துகின்றது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய அணிந்திருக்க கூடிய ஆடையை பார்க்கின்ற பொழுது யூத மத குருக்கள் அணியக் கூடிய ஆடை வடிவமைப்பு கொண்டுள்ளது. இந்த ஆடையானது தங்கத்தாலான ஓரப் பகுதியைக் கொண்டுள்ளது. தாவீது அரசர் அரசவையில் ஆடிப் பாடியபோது மிகவும்


www.malankaralibrary.com

உயர்ந்த விலை உயர்ந்த ஆடை அணிந்து பாடியதாக குறிப்பிடப்படுகிறது. அவ்வாறு இப்படத்திலும் உயர்ந்த ஆடை வடிவமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. தாவீது அரசர் குரல் உயர்த்தி பாடிய பாடல்களுக்கு இணையாக ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையில் தொங்கியவாறு கூறிய வார்த்தைகளும் உரக்கக் கூறிய சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்ததாக சற்று குறுகிய அமைப்பில் பெரியதாக காணப்படக்கூடிய ஐந்து நபர்களின் உருவங்களை நம்மால் பார்க்க முடிகிறது. இந்த ஐந்து உருவங்களும் இயேசு கிறிஸ்துவுக்கு இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் ஆக நிற்கின்றார்கள். இடப்பக்கத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்னை மரியாவும் நற்செய்தியாளரான யோவானும் நிற்கின்றார்கள். வலப்பக்கத்தில் மக்தலேனா மரியாவும், யாக்கோபின் தாய் மரியாவும், மத்தேயு நற்செய்தியில் எட்டாம் அதிகாரம் 5 முதல் 13 வரை உள்ள இறைவார்த்தைகளில் குறிப்பிடப்படும் நூற்றுவர் தலைவனும்

www.malankaralibrary.com

உள்ளனர். அன்னை மரியா, தூய யோவான் மக்தலேனா மரியா மற்றும் யாக்கோபின் போன்றவர்களின் தலையில் புனிதத்தன்மையை சுட்டிக்காட்ட ஒளிவடிவம் உள்ளது. நூற்றுவர்த்தலைவனுக்குப் பின்னால் சிறுவடிவத்தில் இயேசுவால் குணமாக்கப்பட்ட அவனது மகன் உள்ளான். அவன் தனது கைவிரல்களால் மூவொரு கடவுளை ஏற்றுக் கொண்டு அறிக்கையிடுவதைப் போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது.



www.malankaralibrary.com

இந்த நபர்களுக்கு கீழ்ப்பகுதிகளிலாக இரண்டு பக்கங்களிலும் சிறிய இரு மனித உருவங்கள் வரையப்பட்டுள்ளன. தாய் மரியாவின் கால் பகுதியில் வரையப்பட்டுள்ள காவலாளி உரோமைப் படையை சார்ந்தவனாக சீருடையை அணிந்து உள்ளார். தன்னுடைய கையில் ஒரு ஈட்டியையும் வைத்திருக்கின்றான்.
நூற்றுவர்த்தலைவனின் காலடியில் வரையப்பட்டுள்ள மனித உருவம் பரிசேயரான யூதர்களின் வடிவமைப்பைக் கொண்டுள்ளான். இந்த இரண்டு உருவங்களும் இயேசுவின் பாடுகளுக்கு மிகவும் ஆர்வமாக செயல்பட்டவர்கள். இயேசுவுக்கு எதிராக மக்களின் பிரதிநிதிகளாக இவர்கள் சிறு உருவத்தில் வரையப்பட்டு உள்ளார்கள்.

இயேசுவின் கால் முட்டுக்கு கீழ்ப்பகுதியில் வலப்புறமாக பேதுரு மூன்று முறை மறுதலித்த போது சேவல்கோழி கூவியதை எடுத்துக் காட்டக்கூடிய ஒரு சேவல்கோழியின் படமானது வரையப்பட்டுள்ளது.

www.malankaralibrary.com

இயேசுவின் கால்களுக்கு கீழ்ப்பகுதியில் காணப்படும் அப்போஸ்தலர்கள் மேற்குறிப்பிட்ட இந்நிகழ்வுகளை எல்லாம் விண்ணகம் நோக்கியவாறு நின்றுகொண்டிருக்கும் விதத்தில் வரையப்படுள்ளது.

அன்பான சகோதர சகோதரிகளே நம் ஆலயங்களில் இவ்வாறாக பயன்படுத்தும் வரைபடங்களின் அர்த்தங்களை உணர்ந்து திருவழிபாட்டு நிகழ்வுகளில் பக்தியோடு பங்கேற்க முயல்வோம்.

## ✠கிறிஸ்து அரசர் திருநாள்

போலந்து நாட்டில் இயேசு கிறிஸ்துவை அரசராக சித்தரிக்கக் கூடிய கிறிஸ்து அரசர் உருவச்சிலையானது ஸ்வீபோட்ஜின் என்ற இடத்தில் 108 அடி உயரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதுவே உலகிலேயே மிகவும் உயரம் கொண்ட கிறிஸ்துவின் உருவச்சிலை ஆகும். கிறிஸ்துவின் தலையில் அமைக்கப்பட்டுள்ள கீரீடம் மட்டுமே 11 அடி உயரத்தை கொண்டது. 2010 ஆம் ஆண்டு இந்த

www.malankaralibrary.com

உருவச்சிலை அனைவருடைய பார்வைக்கும் திறந்து வைக்கப்பட்டது.

கிறிஸ்து அரசர் திருவிழா ஆண்டு தோறும் நவம்பர் மாதத்தின் 20 முதல் 26 வரை நாட்களில் வரும் இறுதி ஞாயிற்றுக்கிழமை அன்று கொண்டாடப்படுகிறது. இஃது மேற்குத் திருச்சபையில் கொண்டாடப்படும் முக்கியத் திருநாளாகும். இத்திருநாளுடன் இலத்தீன் திருவழிபாட்டு ஆண்டு வட்டம் முடிவடைகிறது. மலங்கரை திருச்சபையும் இத்திருநாளை அதே நாளில் கொண்டாடி மகிழ்கின்றது.

இயேசு கிறிஸ்து அரசராக இருக்கிறார் என்பதைப் பற்றிய திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டு நிகழ்வுகளும் அவற்றில் அவரைப்பற்றி குறிப்பிட்டுள்ள இறைவார்த்தைகளும் இயேசு கிறிஸ்து அரசர் என்பதை மிகவும் தெளிவாக சுட்டிக் காட்டுகின்றன. ஒரு சில அத்தகைய இறை வார்த்தைகளை நாம் காண்போம்.

மரியாவுக்கு தோன்றிய வானதூதர் இயேசு அரசராக ஆட்சி புரிவார் என்று

www.malankaralibrary.com

வெளிப்படுத்தப்பட்டதை லூக்கா நற்செய்தியில் பின்வருமாறு காண்கிறோம். „அவர் பெரியவராயிருப்பார்; உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார்.“ (லூக்கா 1:32-33)

இயேசு பிறந்த போது அவரை வணங்க வந்த மூன்று ஞானியர் பின்வருமாறு அவரை அரசராக சித்தரித்தனர். „யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம் என்றார்கள்.“ (மத்தேயு 2.2)

இயேசுவை அரசராக ஏற்றுக்கொண்ட செபதேயுவின் மனைவி தம் பிள்ளைகளுக்காக வேண்டுகோள் விடுக்குமாறு இயேசுவிடம் வந்து பணிந்து நின்றார். "உமக்கு என்ன வேண்டும்?" என்று இயேசு அவரிடம் கேட்டார். அவர், "நீர் ஆட்சி புரியும்போது என் மக்களாகிய இவர்கள்

இருவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச் செய்யும்" என்று வேண்டினார். (மத்தேயு 20: 20,21)ப்இஃது சாதாரண மக்களும் கூட இயேசுவை அரசராக ஏற்றுக் கொண்டனர் என்பதை சுட்டுகிறது.

பிலாத்துவும் இயேசுவை அரசராகவே அங்கீகரித்தவாறு பின்வருமாறு வினவினான். "பாஸ்கா விழாவின்போது உங்கள் விருப்பப்படி ஒரு கைதியை விடுதலை செய்யும் வழக்கம் உண்டே! யூதரின் அரசனாகிய இவனை நான் விடுதலை செய்யட்டுமா? உங்கள் விருப்பம் என்ன?" என்று கேட்டான். (யோவா 18:39)

மேற்குறிப்பிட்ட அனைத்து கேள்விகளுக்கும் இயேசு அளித்த மறுமொழியை யோவான் நற்செய்தி 18. 36ல் பின்வருமாறு காண்கிறோம். "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல. அது இவ்வுலக ஆட்சி போன்றதாய் இருந்திருந்தால் நான் யூதர்களிடம் காட்டிக் கொடுக்கப்படாதவாறு என் காவலர்கள் போராடியிருப்பார்கள். ஆனால் என் ஆட்சி

www.malankaralibrary.com

இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல" என்றார். (யோவா 18.36)

மத்தேயு நற்செய்தி இருபத்தி எட்டாம் அதிகாரம் பதினெட்டாம் வசனத்தில் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து மொழிந்த இறைவாக்கை ஆதாரமாகக் கொண்டு 1925ஆம் ஆண்டு திருத்தந்தை பதினொன்றாம் பயஸ் அவர்கள் கிறிஸ்து அரசர் திருவிழாவை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தினார். இன்றளவிலும் இந்தத் திருவிழாவானது வெகு விமரிசையாக கத்தோலிக்க திருச்சபையால் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருவனந்தபுரம் வெட்டுக்காடு என்ற ஊரில் அமைந்துள்ள இறை அன்னை ஆலயத்தில் கிறிஸ்து அரசர் பெருவிழா பத்து நாட்கள் கொண்டாடப்படும் போது ஏராளமான இறைமக்கள் வந்து கூடுகின்ற மிக முக்கியமான திருத்தலமாக உள்ளது. மேலும் தினந்தோறும் இவ்வாலயத்திற்கு வந்து கூடும் பக்தர்களின் எண்ணிக்கை

www.malankaralibrary.com

கிறிஸ்துவை அரசராக ஏற்றுக் கொண்டதற்கு சமமாகவே அமையும்.

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் களியக்காவிளை மற்றும் கொல்லங்கோடு மறைவட்டங்களைச் சார்நத பங்குகள் அனைத்தும் இணைந்து கிறிஸ்து அரசர் திருநாளை மிகப்பெரிய ஊர்வலமாக நடத்தி, „ஜெய் ஜெய் கிறிஸ்தரசர்.“ „கிறிஸ்துவே எங்கள் அரசர். அவர் வாழ்க வாழ்க“ என முழக்கமிட்டு வெகு விமரிசையாக கொண்டாடி வருகின்றனர்.

கிறிஸ்து அரசர் என்ற பெயரில் குறிப்பாக நம் மறைமாவட்டத்தில் மூன்று ஆலயங்கள் காணப்படுகின்றன. மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயம், நடைக்காவு கிறிஸ்து அரசர் ஆலயம் மற்றும் சிவலோகம் கிறிஸ்து அரசர் ஆலயம். இந்த ஆலயங்களில் ஆண்டுதோறும் கிறிஸ்தரசர் திருவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் தலைமை இடமான மார்த்தாண்டம்

www.malankaralibrary.com

பேராலயம் கிறிஸ்து அரசர் என்ற பெயரைத் தாங்கியவாறு ஆயரின் ஆலயமாக மறைமாவட்டத்தின் பேராலயமாக திகழ்கிறது என்பதில் நாம் பெருமை கொள்கின்றோம். இயல்பாகவே அமைந்த இப்பெயர் எவ்வளவு பொருத்தமாக உள்ளது.

மேலும் சிவலோகம் என்ற இடத்தில் அமைந்துள்ள கிறிஸ்து அரசர் ஆலயத்திற்கும் மிகப்பெரிய மறைவான அர்த்தம் கொண்டதாக விளங்குகின்றது. அந்த ஊரின் பெயர் சிவலோகம் அல்லது அரகநாடு எனப்படுகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால் நம்மை சார்ந்த இந்து சகோதரர்கள் வணங்கும் இறைவனாகிய சிவன் அல்லது அரகனின் நாடு என்பதுவே ஆகும். இவ்விடத்தில் அமைந்துள்ள நமது ஆலயத்தின் பெயர் கிறிஸ்து அரசர் என அறியப்படுகிறது. இயல்பாகவே இந்த பெயர் சூட்டப்பட்டதாக இருந்தாலும் மிகவும் பொருத்தமான அர்த்தத்தை கொண்டவாறு இந்த ஊர்ப்பெயரும் ஆலயத்தின் பெயரும் ஒருங்கிணைந்து அமைந்திருக்கின்றன. நம் இத்தகைய மூன்று ஆலயங்களும் இந்த வார

நாட்களில் பங்கு ஆலய திருவிழாவை கொண்டாடி கிறிஸ்துவின் மகிமையை பறை சாற்றி வருகின்றன.

நம் மலங்கரை திருவழிபாட்டில் அரியணையில் அமர்ந்திருக்கும் இறைவனை சுற்றி நின்று இறைதூதர்கள் பணிபுரிவதாக பல்வேறு ஜெபங்களை நம்மால் கேட்க முடிகின்றது. அரியணையில் அமர்ந்திருக்கும் இறைவனாகிய இயேசுவையே அரசராக, வானதூதர்கள் அவருக்கு பணிவிடை புரிபவர்களாகவும் நாம் புரிந்து கொள்கின்றோம். நமது ஆலயங்களில் காணப்படும் பலிபீடத்திற்கு த்ரோணோஸ் என்பது பெயர். இதற்கு அரியணை என்பது பொருள். அரியணை என்பது அரசர் வீற்றிருக்கும் அமைவிடம். பலிபீடத்தை ஆண்டவர் இயேசு கிறிஸ்து அரசராக வீற்றிருக்கும் அரியணையாகவே நம்முடைய திருவழிபாட்டு நிகழ்வுகளில் எடுத்தியம்புகின்றோம். கிறிஸ்து அரசர் என்பதை நேரடியாக நாம் நம்முடைய ஜெபங்களில் ஜெபிக்கவில்லை எனினும் கிறிஸ்துவை அரசராக பல்வேறு

மன்றாட்டுகளில் நாம் குறிப்பிடுகின்றோம். நான்காவது செதறா மன்றாட்டில் மன்னாதி மன்னனே என இறைவனாகிய இயேசுவை மன்னர்களுக்கெல்லாம் மன்னனான பேரரசராக நாம் அழைத்து மன்றாடுகின்றோம்.

கிறிஸ்து நமது அரசரெனில் நாம் அவரது குடிமக்கள். „அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.“ „மன்னன் எப்படியோ மன்னுயிர் அப்படி“ப் என்பன பழமொழிகள். இப்பழமொழிகள் நமக்கு மிகப்பெரிய உண்மைகளை எடுத்துரைக்கின்றன. கிறிஸ்தரசரின் ஆட்சிக்குட்பட்ட குடிமக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எத்தகைய வாழ்வு வாழ வேண்டும் என இத்திருநாள் நம்மை சிந்திக்கத் தூண்டுகிறது.

நம் வீடுகளில் இயேசுவை அரசராக சித்தரிக்கின்ற படங்களை சுவரில் பதித்திருக்கின்றோம். தலையில் கிரீடமும், கையில் செங்கோலும், கம்பீரமான உடையும் கொண்டவராக சித்தரிக்கப்பட்டாலும் அவரது இதயம் அன்பால் பற்றி எரிகிறது. அவரது

கைகள் மனித குலத்தை ஆசீர்வதிப்பதாகவே அமைந்திருக்கும்.

தொடக்க நூல் பின்வருமாறு கூறுகிறது, „ஏனோக்கு மொத்தம் முந்நூற்று அறுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தான். ஏனோக்கு கடவுளோடு நடந்து கொண்டிருந்தான். பின்பு அவனைக் காணவில்லை (தொநூ 5:23-24).“ ஏனோக்கின் தூய வாழ்வின் வழியாக விண்ணகத்திற்கு எடுக்கப்படுகின்றான். நாமும் கிறிஸ்தரசரால் விண்ணிற்கு செல்ல நம் தூய வாழ்வால் முயல வேண்டும். கிறிஸ்துவே விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசர். அவரால் செய்ய இயலாதது ஒன்றுமேயில்லை

கிறிஸ்துவின் குடிமக்களாக வாழ வேண்டுமெனில் நாம் கிறிஸ்துவின் போதனைகளை கேட்க வேண்டும், பறைசாற்ற வேண்டும், வாழ்வினில் செயல்படுத்த முனைய வேண்டும். அப்படியாயின் மட்டுமே நம்மால் பின்வருமாறு உரத்த குரலில் கிறிஸ்துவே எங்கள் அரசர் என வெளிப்படுத்த முடியும்.

www.malankaralibrary.com

„ஜெய் ஜெய் கிறிஸ்து அரசர்!" „ஜெய் ஜெய் கிறிஸ்துவின் மகிமை!"

## அனைத்து இறந்தவர்கள் தினம்

அனைத்து இறந்தவர்கள் தினம் என்பது கத்தோலிக்கத் திருச்சபையில் இறந்த முன்னோர்களை நினைவுகூரும் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

ஜெர்மனியில் றைக்ஸ்வால்டு என்னுமிடத்தில் மிகப்பெரிய கல்லறைத் தோட்டம் அமைந்துள்ளது. முதலாம் மற்றும் இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனிக்கு எதிராக தாக்குதல் நடத்திய 7672 பேர்களின் உடல்கள் இங்கே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொருவரின் நினைவுக்காக தூண் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இத்தூணில் இறந்தவரின் பெயரும் வயதும் அவர் கொண்டிருந்த நாட்டின் படைப்பொறுப்பும் குறிப்பிடப்பட்டுள்ளன. 19 வயது மட்டுமே உடைய இளைய நபர்கள் முதல் பெரியோர் வரை இப்பகுதியில் அடக்கம்

செய்யப்பட்டுள்ளனர். 1945 ஆம் ஆண்டு முதலே இங்கே அடக்கம் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தவறாமல் வருடந்தோறும் நெடுந்தூர பயணம் மேற்கொண்டு அஞ்சலி செலுத்துவது இன்று வரையிலும் வழக்கமாகவே உள்ளது.

நாம் இவ்வுலகில் பிறக்கின்ற போது அல்லது தாயின் வயிற்றிலேயே கருவாக உருவாகின்ற போதே மனிதன் உடலும் ஆன்மாவும் கொண்டு ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்தவாறு வேறுபடுத்த முடியாமல் இறைவனால் படைக்கப்படுகிறான். இறைவன் தருகின்ற ஆன்மாவை இறைவனால் மட்டுமே வேறுபடுத்த முடியும். இந்த ஆன்மாவையே நாம் உயிர் எனவும் கூறலாம். இவ்வாறு உடலிலிருந்து ஆன்மா வேறுபடுத்தப்படும் தருணத்தையே மரணம் என்கிறோம்.

மரணத்திற்குப் பின்னர் உடலானது இந்த உலகிலேயே தங்கியிருக்கிறது. ஆன்மா இறைவனின் படைப்பாக இருக்கின்ற காரணத்தினால் இறைவனின் திருவடியை அடைய வேண்டும் என்பது இறைவனின்

திட்டம். இந்த இறைத்திட்டத்திற்கு ஏற்ப ஆன்மாவானது இறைவனை சென்றடைய வேண்டும் என்றால் நமது ஆன்மாவானது முழுவதும் தூய்மைப்படுத்தப்பட்ட நிலையில் இருக்க வேண்டும். ஆனால் இவ்வுலக தீமைகளில் நாம் வாழ்கின்ற போது அறிந்தும் அறியாமலும் பல்வேறு தீமைகள் செய்வதற்கு நாம் உட்படுத்தப்படுகிறோம்.

மரணத்திற்குப் பின்னர் நமது ஆன்மாவானது இத்தகைய தீமையிலிருந்து தூய்மைப்படுத்தப்படுவதற்கு ஏதுவாக "தூய்மை பெறும் நிலை" (*purgatory*) அல்லது உத்தரிக்கிற தலத்திற்கு செல்கிறது. இந்த தூய்மை பெறும் நிலையைத் தான் "உத்தரிக்கிற ஸ்தலம்" அல்லது "உத்தரிப்பு ஸ்தலம்" என்கிறோம். இந்த விசுவாசமானது மிகவும் பழங்காலம் முதலே கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் (CCC) தூய்மை பெறும் நிலையைப் பற்றி தெளிவாக விவரிக்கிறது. தூய்மை பெறும் நிலை என்பது கடவுளோடு நட்புறவில் இறந்து, நிலைவாழ்வு உறுதி

செய்யப்பட்டிருந்தாலும் விண்ணகப் பேரின்பத்தை அடைவதற்கு முன் தங்கள் பாவங்களுக்காகப் பரிகாரம் செய்யும் நிலை ஆகும்.

உத்தரிக்கிற தலத்தில் இருக்கக்கூடிய ஆன்மாக்கள் மண்ணுலகில் வாழும் இறந்தோரின் உறவினர்களாகிய நாம் செலுத்தக்கூடிய ஜெபங்கள் வழியாகவும், மன்றாட்டுக்கள் வழியாகும், திருப்பணிகள் வழியாகவும் தூய்மைப்படுத்தப்பட்டு புனிதமான நிலையில் இறைவனை அடைகிறது.

மேற்குத் திருச்சபையினர் நவம்பர் முதல் நாளான அனைத்து புனிதர்கள் தினத்தன்று இறைவனின் திருவடியடைந்த ஆன்மாக்களுக்காக நன்றி கூறி புகழ் பாடுகின்றனர். நவம்பர் இரண்டாம் நாளில் அனைத்து இறந்தோர் தினத்தன்று தூய்மைபெறும் நிலையிலுள்ள ஆன்மாக்களுக்காக மனறாடுகின்றனர். நவம்பர் மாதம் இரண்டாம் தேதி ஞாயிற்றுக் கிழமையாக இருந்தால் மூன்றாம் தேதியை அனைத்து இறந்தோர் தினமாக கொண்டாட

www.malankaralibrary.com

வேண்டும் என்று உரோமன் திருவழிபாட்டு மையமானது அறிவித்துள்ளது. அந்த அளவுக்கு அனைத்து இறந்தோர் தினமானது மிக முக்கியமான நாளாக கருதப்பட்டு வருகிறது.

இறந்தோருக்காக வேண்டுதல் பற்றி திருவிவிலியத்தில் மக்கபேயருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தில் பன்னிரண்டாம் அதிகாரம் 38 முதல் 46 வரையுள்ள இறைவார்த்தைகள் மிகவும் தெள்ளத்தெளிவாக எடுத்துரைக்கின்றன. „ஆகவே இறந்தவர்கள் தங்கள் பாவத்தினின்று விடுதலை பெறும்படி அவர் அவர்களுக்காக பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுத்தார்"ப் இந்த இறைவார்த்தை பகுதியானது இறந்தவருக்காக ஜெபிக்க வேண்டும் என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. யூதர்களும் இத்தகைய ஒரு எண்ணத்தை தான் கொண்டிருந்தார்கள். இஸ்ரயேலின் குலமுதுவர்கள் பல நாட்கள் இறந்தோருக்காக துக்கம் கொண்டாடி செபித்ததாக நாம் திருவிவிலியத்தில் காண்கின்றோம். இதன் அடிப்படையில் தான் நாமும் இறந்தவர்களுக்காக ஜெபிக்கிறோம்.

www.malankaralibrary.com

திருப்பலி ஒப்புக்கொடுக்கின்றோம். இறந்தவர்களுக்காக தனிப்பட்டமுறையில் வேண்டுகிறோம்.

நவம்பர் ஒன்றாம் தேதி அனைத்து புனிதர்கள் தினத்தன்று அனைத்து நபர்களும் தங்களுடைய இறந்த குடும்பத்தினருக்காக கல்லறைத் தோட்டத்திற்கு சென்று மலர்கள் வைத்து, மெழுகுவர்த்திகள் கொளுத்தி வைத்து, கல்லறைகளை அலங்கரித்து ஜெபித்து வருகிறார்கள். இன்றும் இந்த மரபு மிக முக்கியமானதாக கடைபிடிக்கப்படுகிறது. குறிப்பாக கல்லறைக்குச் சென்று அஞ்சலி செலுத்துவது மிக முக்கியமான ஒன்றாக மக்கள் கருதி வருகிறார்கள். சந்தைக்கு செல்வது போன்ற மக்கட்கூட்டம் இன்றைய நாளில் கல்லறைத் தோட்டங்களிலும் காண முடிகின்றது.

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையும் மற்று கிழக்குத் திருச்சபைகளும் சனிக்கிழமை தோறும் இறந்தோருக்காக ஜெபிக்க வேண்டிய நாளாக ஒதுக்கியுள்ளது. இறந்துபோன ஆயர்களுக்காக அவர்கள் இறந்த தினத்தை தனிப்பட்ட முறையில்

ஒவ்வொரு மறைமாவட்ட அளவில் நினைவு கூர்கின்றோம். எனவே தான் நமது முதல் மறைமாவட்ட ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் அவர்கள் இறந்த ஏப்ரல் 8ஆம் தேதியை மறைமாவட்ட அளவில் வெகு விமரிசையாக நினைவு கூர்கிறோம்.

மூன்று நோன்பிற்கும் பெரிய நோன்பிற்கும் இடைப்பட்ட காலத்தில் உள்ள இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் முதலாவது ஞாயிற்றுக்கிழமையன்று இறந்த அனைத்து குருக்களுக்காகவும் மன்றாடுகிறோம். இன்றைய தினத்தில் குக்கிலியோன் பாடலுடன் தூப மன்றாட்டுக்கள் நடத்தி கல்லறைகளும் ஆசீர்வதிக்கப்படுகின்றன. இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையானது இறந்த அனைத்து விசுவாசிகளையும் நினைவு கூரும் நாள் ஆகும். இந்த நாளிலும் இறந்தோருக்கான குக்கிலியோன் மன்றாட்டுக்கள் பாடி ஜெப வழிபாடுகளும் ஆலயத்தில் நடத்தி வருகின்றோம்

அன்பான சகோதர சகோதரிகளே நாம் இறந்தவர்களுக்காக தவறாது ஜெபிக்க வேண்டும், இறந்தவர்களைப் பற்றி நாம்

நன்மை மட்டுமே பேச பழகிக் கொள்ளல் வேண்டும். இந்த உலகில் வாழ்பவர்கள் எந்த நபரும் பரிபூரணமாக தூய்மையான மனம் உடையவர்கள் அல்ல. அனைவருமே தவறு செய்தவர்கள். அறிந்தும் அறியாமலும் தவறான வழியில் வாழ்ந்து இறப்பவர்கள். இறந்தோரை நாம் மதிக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய வாழ்வில் செய்திருக்கக்கூடிய நற்காரியங்களை நினைவு கூர்ந்து அவர்களுக்காக நாம் அன்றாடம் செபிக்க வேண்டும். அவர்கள் செய்து காட்டிய வழியை நாம் பின்பற்ற தயாராக இருக்க வேண்டும்.

விருந்து வீட்டிற்கு செல்வதை விடவும் மரண வீட்டிற்குச் செல்ல முன்னுரிமை வழங்கவும் இறந்தோருக்கு அஞ்சலி செலுத்தி மன்றாடவும் பழகிக் கொள்வோம்.

அனைத்து புனிதர்கள் தினம் என்பது விண்ணகத்தில் இறைவனிடம் அமைந்திருக்கக் கூடிய அனைத்து ஆன்மாக்களையும் நினைவு கூரக்கூடிய நாளாகும். அனைத்து இறந்தவர் தினம் என்பது இறந்து விண்ணகத்தில் செல்வதற்காக

www.malankaralibrary.com

காத்திருக்கக்கூடிய தூய்மை பெறும் நிலை என்னும் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கக்கூடிய ஆன்மாக்களை நினைவுகூரும் தினம் ஆகும். நம் முன்னோர்களை இந்நினைவு நாளில் தவறாது நினைவுகூர்ந்து செபிக்க முயல்வோம்.

## இறுதித் தீர்ப்பு தினம்

திருச்சபையின் மறுமலர்ச்சி காலத்தில் மைக்கேல் ஆஞ்சலோ என்ற இத்தாலிய கலைஞரால் இறுதித் தீர்ப்பு பற்றிய ஓவியம் வத்திக்கான் நகர சிஸ்டைன் சிற்றாலயத்தில் வரையப்பட்டது. நான்கு ஆண்டுகள் செலவிடப்பட்டு வரையப்பட்ட இந்த ஓவியத்தில் ஏறக்குறைய 300 மனித வானதூதர்கள் போன்ற வடிவங்கள் உள்ளன. இந்த ஓவியமானது ஆண்டவர் இயேசு கிறிஸ்து இறுதியில் தனது இரண்டாம் வருகையின் போது நம்மை எவ்வாறு தீர்ப்பிடுகிறார் என்பதை பற்றி தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

www.malankaralibrary.com

சொராட்டிரியம், யூத மதம், கிறிஸ்தவ மதம் மற்றும் இஸ்லாம் மதங்களில் இறுதித் தீர்ப்பு பற்றிய சிந்தனைகள் பல்வேறு விதங்களில் எடுத்துக் காட்டப்படுகின்றன.

சொராட்டிரிய மதத்தின் படி இறந்த பின்னர் நம்முடைய ஆன்மாவானது மூன்று இரவுகள் இறைவனின் சன்னதியில் சரணடைகின்றன. இந்த மூன்று நாட்களில் அவர்கள் செய்த நற்காரியங்களும் தீய காரியங்களும் அளவிடப்படுகின்றன. நற்காரியங்கள் அதிகமாக செய்தவராக இருந்தால் அழகான விரிந்து பரந்த பாலத்தின் வழியாக விண்ணகத்தில் நுழைவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள். தீய செயல்கள் அதிகமான அளவு செய்தவரின் ஆன்மா மிகவும் குறுகலான கரடுமுரடான இருள் நிறைந்த பாலம் வழியாக நரகத்திற்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனாலும் இந்த நிலையானது ஆன்மாவின் கடைசி நிலையல்ல. அந்த ஆன்மாவை சில காலத்திற்குப்பின் இறைவனான ஒரு இளவரசன் காப்பாற்றி இறுதித் தீர்ப்பு என்ற ஒரு நிலைக்கு கொண்டு செல்கிறார். பின்னர்

www.malankaralibrary.com

அனைத்து ஆன்மாக்களையும் இறைவன் விண்ணுலகிற்கு அழைத்துச் செல்கிறார்.

யூத மதம் ஆண்டவரின் நாள் என ஒன்றை குறிப்பிடுகிறது. இந்நாளில் தான் இஸ்ராயேல் மக்கள் தங்களுடைய நற்செயல்களுக்காக தீர்ப்பிடப்படுகின்றார்கள். அன்றே இறைவனின் புதிய இறையரசு ஆரம்பமாகிறது.

இஸ்லாமிய மதமானது இறுதித் தீர்ப்பை பற்றிய மிகவும் ஆழமான கருத்தை கொண்டு விளங்குகின்றது. ஐந்து முக்கிய இஸ்லாமிய நம்பிக்கைகளில் ஒன்றாக இறுதித் தீர்ப்பினை இஸ்லாமியர்கள் கடைபிடிக்கிறார்கள். மரணத்திற்குப் பின்னர் ஒவ்வொரு ஆன்மாவும் அவர்களுடைய விசுவாச வாழ்வைப் பற்றி வானதூதர்களால் விசாரணை நடத்தப்படுகின்றது. விசுவாசத்திற்காக மறைசாட்சியாக இறப்பவர்கள் உடனடியாக வரவேற்று விண்ணுலகிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். மற்றவர்கள் உத்தரிக்கிற தலத்துக்கு

www.malankaralibrary.com

தூய்மைப்படுத்தப்பட அனுமதிக்கப்படுகின்றார்கள். கடைசியாக ஒரு நாளில் அவர்கள் உயிர்த்தெழச் செய்யப்படுகிறார்கள். மீண்டும் இவர்கள் விசாரிக்கப்படுகின்றார்கள். ஒவ்வொருவருடைய பெயரிலும் இரு வபுத்தகங்கள் அமைந்திருக்கும். ஒன்று நற்செயல்கள் அடங்கியவையும், மற்றொன்று தீச்செயல்கள் அடங்கியவை. ஒவ்வொரு நபரின் கழுத்தில் இரண்டு புத்தகங்களும் கட்டித் தொங்க விடப்பட்டு அளவிடப்படும். புத்தகங்களின் எடைக்கேற்ப விண்ணுலகிற்கோ நரகத்திற்கோ அனுப்பப்படுவர்

ஆசிய நாடுகள் மற்றும் இந்தியாவில் உருவான இந்து மதத்திலும், ஜைன மதத்திலும், புத்த மதத்திலும் இறுதித்தீர்ப்பு பற்றிய எந்தவிதமான நிகழ்வுகளும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மறுபிறப்பு பற்றிய எண்ணத்தை கொண்டிருக்கின்றார்கள்.

நமது கிறிஸ்தவ மத சிந்தனைகளிலும் கிறிஸ்தவ இறையியல் கோட்பாடுகளிலும்

www.malankaralibrary.com

இறுதித் தீர்ப்பு பற்றிய முக்கியமான கருத்தாக பழங்காலம் முதலே கருதப்பட்டு வருகின்றது. இத்தகைய எண்ணங்களை உள்ளடக்கிய பல்வேறு செபங்களை நம் மலங்கரை திருவழிபாட்டில் புறுமியோன் மன்றாட்டுக்களில் செபிக்கிறோம். இறந்தோரின் பெயர்கள் „பிறிஸ்தா“ எனப்படும் வாழ்வில் நூலில் எழுதப்படுவதாக நாம் மன்றாடுகிறோம். கத்தோலிக்க மறைக்கல்வி என்னும் நூல் தெளிவாக இறுதித் தீர்ப்பு பற்றி குறிப்பிடுகிறது.

இன்றைய நற்செய்திப் பகுதியிலும் விண்ணுலக பேரின்பத்திற்கு தகுதியுடையோர் கொள்ளும் குணங்கள் பற்றி விளக்கமாகக் கேட்டோம். விண்ணிற்கு தகுதியுடையோர் என விளக்க ஆறு சொல்லாடல்கள் குறிப்பிடப்படுகின்றன. விண்ணிற்கு தகுதியுடையோரை சின்னஞ்சிறியவர்கள் எனப்பெயரிட்டு கிறிஸ்தவ வாழ்வின் மேன்மையை கிறிஸ்து வரையறுக்கின்றார். ஆறு சொல்லாடல்கள் வழியாக சின்னஞ்சிறியவர்களைக் குறிப்பிடுகின்றார். இந்த ஆறு சொல்லாடல்களுமே நம் கிறிஸ்தவ

www.malankaralibrary.com

வாழ்வுக்குரிய காரணிகளாக ஏழைகளுக்கும் செல்வர்களுக்கும் உள்ளன.

Àü 'பசி' - செல்வன் பசியாய் இருந்ததாக அல்லது இருப்பதாக நாம் கேள்விப்பட்டதில்லை. செல்வன் அதிகம் சாப்பிட்டதால் அவதிப்படுவானே தவிர அவன் என்றும் பசியோடு இருப்பதில்லை. அவனது உணவுமேசை எப்போதும் நிரம்பியே இருக்கும். ஊரில் கொடும் பஞ்சம் நிலவினாலும் செல்வன் உண்பதற்குச் சோறு இருக்கும்.

Ãü 'தாகம்' - ஊரெல்லாம் வறட்சி என்றாலும் செல்வன் வீட்டு தண்ணீர் குழாய் வீணாக ஓடிக்கொண்டே இருக்கும். தனக்கென குளம், ஏரி, ஆறுகளைத் திருப்பிக்கொண்ட வரலாறுகள் அதிகம்.

Õü 'ஆடையின்மை' - செல்வன் பல்வேறு ஆடைகள் அணியக்கூடியவன். விருந்துக்கு ஒன்று, பயணத்திற்கு ஒன்று, அந்தப்புரத்திற்கு ஒன்று, பொழுதுபோக்கிற்கு ஒன்று, விளையாட்டுக்கு ஒன்று என எண்ணற்ற ஆடைகளை வைத்திருப்பவன் அவன்.

Œü 'அந்நியம்' - செல்வன் யாருக்கும் அந்நியம் இல்லை. அவனை எல்லாருக்கும் தெரியும். அவனை முன்பின் பார்த்திராதவர்கள் கூட

செல்வன் என்றவுடன் அவனைக் கண்டவுடன் ஆரத்தி எடுத்து மாலைகளுடனும் ஆடல் பாடல்களுடனும் வரவேற்று உபச்சாரம் செய்வர்.

ஊ 'நோய்' – பணமுள்ளிடத்து தொற்று நோய்கள் தொற்றுவதில்லை. ஊரெல்லாம் நோய் பரவினாலும் செல்வர்களை தாக்காது.

–ü 'சிறை' - சிறை என்பது கட்டு. ஆனால் பணபலத்தால் செல்வனை யாரும் சிறையிட முடியாது. அவன் தான் நினைத்த இடத்திற்கு, நினைத்த நேரத்திற்குச் செல்வான். அவன் மற்றவர்களைச் சிறையிடுவானே தவிர அவனை யாரும் சிறையிட முடியாது. அவன் சிறைக்குச் செல்வான் எனில் சிறையைக்கூட இன்பவனமாக மாற்றி விடுவான்.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட ஆறு சொல்லாடல்களும் செல்வர்களுக்கு ஒருபோதும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. பாதிக்கப்படுவோரை சின்னஞ்சிறியோராக குறிப்பிட்டு விண்ணரசுக்கு தகுதியுடையவர்கள் என கிறிஸ்து குறிப்பிடுகிறார்.

**யார் செல்வர்கள்? யார் ஏழைகள்?** பொருளாதார அடிப்படையில் மனிதன் உயிர் வாழத்தேவையான மரபு அடிப்படைத்

www.malankaralibrary.com

தேவைகளான உணவு, உடை மற்றும் இருப்பிடம் போன்றவை இல்லாத நபர்களைத் தான் ஏழைகள் என்கிறோம். இவற்றோடு மற்றும் பல சொகுசுத்தேவைகளை அளவுக்கதிகமாக கொண்டவர்களே செல்வர்கள் ஆவர்.

திருவிவிலியத்தில் மேற்குறிப்பிட்ட ஆறு சொல்லாடல்களும் கொண்டு வாழ்வோர் ஏழைகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் இத்தகைய தங்கள் ஏழ்மை நிலையில் கடவுளுக்கு ஏற்புடையவராக வாழ்ந்து விண்ணரசிற்கு தகுதி பெறுவர் எனப்படுகிறது. ஏழ்மை நிலை இறைவனோடு இணைந்திருக்க உதவுகின்றது என கிறிஸ்து கற்பிக்கின்றார். அவ்வாறே சின்னஞ்சிறியோரான ஏழைகள் இறுதித் தீர்ப்பின் போது விண்ணிற்கு தகுதி பெறுகின்றார்கள்.

'பசித்திருப்போர்,' 'தாகமுற்றோர்,' 'ஆடையின்றி இருப்போர்,' 'அந்நியர்,' 'நோயுற்றோர்,' மற்றும் 'சிறையிலிருப்போர்' என அனைவரையும் தன் சகோதர, சகோதரிகள் என்று கருதுவதன் வழியாகவும் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பதன்

www.malankaralibrary.com

வழியாகவும் செல்வர்களும் இறுதித் தீர்ப்பின் போது விண்ணகப் பேரின்பத்தைப் பெற தகுதி பெறுகின்றார்கள். இவ்வாறு சின்னஞ்சிறியோரான ஏழைகளும், செல்வர்களும் விண்ணிற்குள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றார்கள்.

“ஏழையாய் இருப்பது சாபமும் அல்ல, செல்வனாய் இருப்பது ஆசீருமல்ல“ப் ஏழையாயிருந்தும், செல்வனாய் இருந்தும் இறை ஆசீரான விண்ணகத்தை நாம் இறுதித்தீர்ப்பின் போது பெற்றுக்கொள்ள முடியும் என நற்செய்தி வாசகம் நம்மை நினைவுபடுத்துகிறது.

அன்பான சகோதர சகோதரிகளே, நாம் நம்மையே கேட்க வேண்டும். யார் ஏழைகள்? நான் ஏழையாயின் இறைவனோடு இணைந்திருக்கின்றேனா? யார் செல்வர்கள்? நான் செல்வந்தனாயின் சின்னஞ்சிறியோருக்கு என்னால் இயன்ற உறுதுணையை காட்ட முடிகின்றதா? இறுதித் தீர்ப்பின் போது என்னால் விண்ணகத்திற்குள் நுழைய முடியுமா?

www.malankaralibrary.com

## –ப்வானதூதர்களின் தினம்

கிறிஸ்துவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, அகில உலக கத்தோலிக்க திருச்சபை ஆண்டு தோறும் செப்டம்பர் 29 ம் நாளில் தலைமை வானதூதர்களான புனித மிக்கேல், புனித கபிரியேல் மற்றும் புனித இரஃபேல் ஆகியோரின் திருநாளை கொண்டாடி மகிழ்கின்றது. அவ்வாறே அக்டோபர் மாதம் 2 ஆம் நாள் அனைத்து வானதூதர்களின் திருநாளையும் கொண்டாடுகின்றது. நம் சமூகத்தில் பலர் இத்தகைய வானதூதர்களின் பெயர்களை தங்களுடைய சொந்த பெயர்களாக கொண்டிருக்கின்றனர். அனைத்து நபர்களுக்கும் பெயர் கொண்ட விழாவின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மலங்கரை கத்தோலிக்க திருவழிபாட்டு முறைப்படி குறிப்பாக நற்கருணை நிறுவுக் கூற்றுக்கு முன்னரும், புறுமியோன் செதறா மன்றாட்டுக்களின் போதும், கிறிஸ்து பிறப்பு திருநாள் திருச்சடங்குகளிலும், மற்றும் பல

www.malankaralibrary.com

திருவழிபாட்டு ஜெபங்களிலும் வானதூதர்களின் பண்புகளைப் பற்றியும் சேவைகளைப் பற்றியும் வடிவங்களை பற்றியும் நாம் ஜெபிக்க கேட்டிருக்கின்றோம்.

வானதூதர்கள் என்பவர்கள் யார்? அவர்கள் எத்தனை பேர்? அவர்களுடைய பணிகள் என்ன? அவர்களுடைய இயல்பு என்ன? அவர்களுடைய அமைவிடம் என்ன? அவர்களுடைய வடிவம் என்ன? என்பதைப் பற்றி நாம் கட்டாயமக அறிந்து கொள்ள வேண்டும்.

வானதூதர்கள் தூய அரூபிகள் ஆவர். அவர்கள் உடலற்றவர்கள். அவர்கள் மனிதர்களும் அல்ல. கடவுள்களும் அல்ல. கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இடைப்பட்ட அமைவிடத்தையும் இயல்பையும் கொண்டுள்ளனர். இவர்கள் ஓவியங்களில் சிறகுகளுடன் கூடிய மனித உருவமாக சித்தரிக்கப்படுகிறார்கள். இறைவனுக்காக பணிபுரியும் வண்ணம், இறைவனின் வார்த்தைகளை மனிதனுக்கு பரிமாறுவதற்கு மனித உருவோடு தோற்றமளிக்கிறார்கள். இந்த மனித உடல் வடிவமானது

www.malankaralibrary.com

நிரந்தரமற்றது. தம் பணி நிறைவடைந்த பின் உருவின்றி மாற்றமடைந்து விண்ணை நோக்கி செல்கிறார்கள்.

வானதூதர்களின் மிக முக்கிய பணிகளாக கருதப்படுபவை: இறைவனுக்கு பணிவிடை புரிதல், இறைவனை புகழ்தல் மற்றும் இறைவனை ஆராதித்தல் போன்றவையாகும். நம் திருவழிபாட்டு செபங்களில் வானதூதர்கள் இறைவனருகில் பயத்துடனும் மதிப்புடனும் மரியாதையுடனும் பணிபுரிந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளன. இறைவனுக்கு பணி புரிவதோடு மனிதர்களுக்கும் உதவுதல் என்ற பணியும் உள்ளடங்கியுள்ளது. இறைவனை புகழ்தல் மற்றும் தங்கள் கீழுள்ள வானதூதர்களின் பணிகளை ஒழுங்கு செய்தல், விண்ணகப் பொருட்களை கண்காணித்தல், பிரபஞ்ச இயக்கமுறைகளை ஒழுங்குபடுத்துதல், விண்ணகப் பணிகளை கவனித்தல் போன்றவை இவர்களின் மற்று பணிகளாகும்.

திருவிவிலியத்தில் திருப்பாடல்கள் நூலில் 91 ஆம் அதிகாரம் 9 முதல் 12 வரை உள்ள இறைவார்த்தைகளை நாம்

www.malankaralibrary.com

வாசிக்கின்ற போது வானதூதர்கள் எந்த அளவுக்கு நம்முடைய விசுவாச வாழ்வில் முக்கியமானவர்கள், இறைவனோடு நம்மை இணையச் செய்ய உதவுகிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. நாம் செல்லும் இடமெங்கும் நம்மைக் காக்க வானதூதர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என திருப்பாடல்கள் நூல் தெள்ளத்தெளிவாக எடுத்துரைக்கிறது. 34 திருவிவிலிய நூல்கள் வானதூதர்களைப் பற்றி விவரிக்கின்றன.

பல்வேறு இறையியல் வல்லுநர்கள் வானதூதர்களைப் பற்றி தங்களுடைய நூல்களில் தெள்ளத் தெளிவாக விவரித்துள்ளார்கள். நான்காம் நூற்றாண்டில் புனித அக்குவின் தெளிவான கருத்துக்களை தன்னுடைய மிக முக்கியமான ***சும்மா தியோளஜிக்கா*** என்ற நூலில் வானதூதர்களைப் பற்றி விவரித்துள்ளார். இதுவே பிற்கால வானதூதரியலுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

முதல்முறையாக மரியாவின் விண்ணேற்பு நிகழ்வை ஓவியமாக வரைந்தவர் ***பிரான்சிஸ்கோ பாட்டிசீனி***

என்பவர். வானதூதர்கள் 9 குழுக்களாக விண்ணகத்தில் இறைவனோடு அமைந்திருப்பதையும் இவ்வேளையில் முக்கிய வானதூதர்கள் அன்னை மரியாவை உடலோடு இறைவனருகில் எடுத்துச் சென்றதையும் தன்னுடைய ஓவியத்தில் மிக அருமையாக சுட்டிக்காட்டுகின்றார்.

வானதூதர்கள் அவர்கள் பணிகளின் அடிப்படையில் ஒன்பது குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளனர். எனவே தமிழில் இவர்கள் ***நவவிலாச வானதூதர்கள்*** என்று அழைக்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு கோளத்திலும் மூன்று குழுக்களாக, மூன்று கோளங்களும் மொத்தமாக ஒன்பது குழுக்கள் உள்ளன.

நம் திருவழிபாட்டு சிலுவைக் கொண்டாட்டத்தின் ஹௌத் மாலாக்கே பகுதியில் கிழக்கு, மேற்கு மற்றும் வடக்கு நோக்கிய புகழ்ப்பாக்களில் ஒன்பது குழுக்களாக வானதூதர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்: ***வானதூதர்கள், குறூபேன்மார்கள், சுறேப்பேன்மார்கள், எரிமய தூதர்கள், ஆன்மீகர்கள்,***

www.malankaralibrary.com

***மண்மயர்கள், மேலுள்ளவர்கள், நடுவிலுள்ளவர்கள், கீழுள்ளவர்கள்***ப

இத்தகைய ஒன்பது குழுக்களையும் அடிப்படையாகக் கொண்டே நமது ஆலயங்களில் பாடகர் பகுதிக்கும் தூயகத்துக்கும் இடையே வானதூதர்களின் அமைவிடமாக ஒன்பது படிக்கட்டுகள் (அல்லது மூன்று) அமைக்கப்பட்டு வருகிறது.

அவ்வாறே வானதூதர்களின் அடையாளமாக தூயகத்துள் திருப்பணி புரியும் தூயகப் பணியாளர்களின் (பீடச்சிறுவர்களின்) எண்ணிக்கையும் ஒன்பது என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எரிந்து சுடரொளி வீசுவோரான செராபீன்கள் தங்கள் இரு இறகுகளால் முகத்தை மறைப்பர், இரு இறகுகளால் கால்களw மறைப்பர், இரு இறகுகளால் பறப்பர். ஆண்டவரின் அரியணையைச் சுற்றி நிற்கும் நான்கு உயிர்களான கெருபுகள் சிங்கம், இளங்காளை, மனிதன், கழுகு போன்ற முக அமைப்புகளை கொண்டுள்ளன. கெருபுகளின் ஆறு சிறகுகளின் உள்ளும் புறமும் கண்கள் உள்ளன. அரியணை

www.malankaralibrary.com

அமர்வோரின் உருவம் என்பது பல வளையங்களுக்குள் நூற்றுக்கணக்கான கண்களைக் கொண்ட நெருப்புச் சக்கரம் ஆகும்.

இவர்களில் மிக முக்கியமானவர்களாக கருதப்படுபவர்கள் தான் அதிதூதர்கள் அல்லது தலைமை வானதூதர்கள் எனப்படுபவர்கள். அதிதூதர்களான புனித மிக்கேல், புனித கபிரியேல் மற்றும் புனித இரஃபேல் போன்றவர்களின் திருநாளை நாம் இன்றைய தினம் கொண்டாடி கொண்டிருக்கிறோம். இவர்களைப் பற்றிய குறிப்புக்கள் திருவிவிலியத்தில் மிகத் தெளிவாக உள்ளன.

அதிதூதர் கபிரியேல் புனித மரியாவுக்கு காட்சியளித்து ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை முன்னறிவித்தார். அதிதூதர் மிக்கேலின் பெயரானது மூன்று முறை தானியேல் ஆகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மிக்கேல் அதிதூதர் இஸ்ராயேல் மக்களுக்காக இறைவனோடு பேசக்கூடிய பணியை நிறைவேற்றியிருக்கிறார். அதிதூதர் இரபேல் தோபித்து நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறார். தோபித்து பல்வேறு கஷ்டங்களுக்கு உட்பட்ட போது அவரை குணமாக்கக் கூடியவராக

www.malankaralibrary.com

இறைவனின் பணியை அவர் நிறைவேற்றி இருக்கிறார்.

விவிலியத்தில் மூன்று தலைமை தூதர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றாலும் பல்வேறு மரபுகளின்படி மொத்தமாக 7 தலைமை வானதூதர்கள் உள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீழ்ச்சியடைந்த கெருபுகளான வானதூதர்களை புனித தோமஸ் அக்குவினாஸ் சாத்தான் என பெயரிட்டு அழைத்தார். இறைவிருப்பத்திற்கு எதிராக செயல்படும் மற்று போலி வானதூதர்களின் பெயர்கள் லூசிபர், சாத்தான், பெலியல், பெயேல்செயேபு ஆகும்.

இஸ்லாம் மற்றும் யூத மதத்திலும் வானதூதர்கள் முக்கிய பங்கைக் கொண்டுள்ளனர். ஐரோப்பிய நாடுகளில் பல நபர்களும் தங்களுடைய வாகனங்களில் வானதூதரின் படத்தையோ உருவத்தையோ தொங்கவிட்டு வானதூதர் பால் கொண்ட நம்பிக்கையை எடுத்துக் காட்டி வருகின்றார்கள்.

மேலும் பல இடங்களிலும் வானதூதர்கள் பெயரில் ஆலயங்களும் உள்ளன. நம் தமிழகத்திலும் குறிப்பாக குமரி மாவட்டத்தில் சுசீந்திரத்தை அடுத்த ராஜாவூர் என்ற

www.malankaralibrary.com

இடத்தில் உள்ள புனித மிக்கேல் அதிதூதரின் திருத்தலம் சென்று செபித்து குணமடைவோர் ஏராளம்.

வானதூதர்கள் நம்மை அன்பு செய்கின்றார்கள். நாம் பல நேரங்களிலும் இறைவனை வெறுக்கின்ற போது நம்மை இறைவனோடு ஒன்றிணைத்துக் கொண்டு நம்மை பாதுகாத்து வருகின்றார்கள். இந்த வானதூதர்கள் நமக்காக பரிந்துரை வேண்டுகிறார்கள். பல நேரங்களிலும் இறைவனைப் புகழ மறக்கின்ற போது வானதூதர்கள் நம் சார்பாக இறைவனை புகழ்கிறார்கள். வானதூதர்கள் எப்போதும் நம்மோடு உள்ளனர். நம் வெற்றுக் கண்களுக்கு அவர்கள் புலப்படாவிட்டாலும், இறைவனின் பணியாளர்களாக வானதூதர்கள் தான் நம்மை பாதுகாத்து வருகின்றார்கள்.

**—திருச்சபையின் புதிதாக்க தினம்**
**(ஹூதோஸ் ஈத்தோ)**

www.malankaralibrary.com

„ஹூதோஸ் ஈத்தோ“ அல்லது „திருச்சபையின் புதிதாக்கம்“ என்ற திருச்சபையின் கொள்கையை மையப்படுத்திய திருநாளை இன்றைய தினத்தில் நாம் கொண்டாடுகின்றோம். திருச்சபையை இறைமக்களின் திருக்கூட்டம் என அறிவோம். திருச்சபையின் வெளி அடையாளமான கட்டிடத்தையும் திருச்சபை என்ற பொருளிலேயே நாம் புரிந்து கொள்கிறோம். இறைமக்களின் திருக்கூட்டம் என்ற முறையில் திருச்சபையின் உறுப்பினர்கள் எவ்வாறு புனிதமாக்கப்பட வேண்டும் என்பதுவே கூதோஸ் ஈத்தோ என்ற திருநாளின் பொருளாகும். திருச்சபையை ஆலயமாகக் கருதி அதனை புதுமைப்படுத்துவதையே அல்லது புதுப்பித்தலையே ஹூதோஸ் ஈத்தோ என இன்றைய நாளை புரிந்து கொள்ள வேண்டும்.

நற்செய்தி வாசகத்திற்குப் பின்னர் பாடப்பட்ட பாடலில், „நன்முறையில் கைகழுவி அகத்தூய்மை“ பெறுவதாக பாடுகின்ற போது திருச்சபையின் புறத்தூய்மை அதன் அகத்தூய்மைக்கு

www.malankaralibrary.com

வழிவகுக்கும் என்னும் பேருண்மையை எடுத்துக் காட்டுகிறது.

கூதோஸ் ஈத்தோ மற்றும் ஹூதோஸ் ஈத்தோ என்ற இரண்டு விழாக்களும் யூத மதத்தின் பின்னணியிலியிலிருந்து கொண்டு வரப்பட்டவையாகும். எருசலேம் ஆலயமானது சாலமன் அரசரால் கட்டி உயர்த்தப்பட்டு பின்னர் நெபுகத்நேசர் அரசரால் அழிக்கப்பட்டது. இறைவாக்கினர்களான எஸ்ரா மற்றும் நெகேமியா இவர்களுடைய தலைமையில் மீண்டும் புதிதாக இவ்வாலயம் கட்டி எழுப்பப்பட்டது. மீண்டும் பல்வேறு போர்களினால் அழிக்கப்பட்ட இந்த ஆலயமானது ஏரோது மன்னனால் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

கிறிஸ்துவுக்கு முன் 175 ஆம் ஆண்டில் அந்தியோக்கு என்னும் மன்னர் எருசலேம் நகரை முற்றிலுமாக அழித்து எருசலேம் தேவாலயத்தையும் சேதப்படுத்தினார். எருசலேம் தேவாலயத்திற்குள் கிரேக்க தேவர்களின் சிலைகளை நிறுவி அவற்றின் முன்

பன்றியைக் கொன்று பலியிட்டு யூத மத குருக்களை அதனை சாப்பிடுமாறு வற்புறுத்தினார். சாப்பிட மறுத்த யூத மதகுருக்களின் நாவினை அவர் துண்டித்தார். சாப்பிட மறுத்து ஏராளமான இளைஞர்களும் குழந்தைகளும் பெண்களும் தங்கள் உயிரை இறைவனுக்காக சமர்ப்பிக்க தயாராகினர். இவ்வாறு கொல்லப்பட்டவர்களுள் முக்கியமானவர்களான ஸ்மூனி மற்றும் அவரது ஏழு குழந்தைகளையும் நம் திருவழிபாட்டில் ஆகஸ்டு முதலாம் நாளில் நினைவு கூர்கின்றோம். ஏறக்குறைய 80 ஆயிரம் மக்கள் இந்த மதத் துன்புறுத்தலுக்கு உள்ளாகினர் என மரபு கூறுகின்றது.

மிகவும் குறுகிய எண்ணிக்கையைக் கொண்டிருந்த யூதர்கள் யூதா மக்கபேயு தலைமையில் யூத மத வழிபாடுகளையும் ஆலயத்தின் தூய்மையும் புதுப்பித்து அந்நாளை பின்னர் ஆண்டு தோறும் திருநாளாக கொண்டாடினர். அந்நாளில் வண்ண விளக்குகளாலான ஒளி அலங்காரங்களால் ஆலயத்தை அலங்கரித்து

www.malankaralibrary.com

மீண்டும் புதுப்பித்தலின் அடையாளமாக இந்நிகழ்வினை நினைவு கூர்ந்தனர்.

இயேசு கிறிஸ்து இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் வளர்ந்து வருகிறார். மீண்டும் ஆலயத்தின் தூய்மை நிலை யூத பிரமாணிகளால் பாதிக்கப்பட்ட போது ஆலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வியாபார நிறுவனங்களை விரட்டியடித்து தூய்மைப்படுத்தப்பட வேண்டியதன் உண்மை நிலையையும் தேவையையும் மீண்டும் யூதர்களுக்கு நினைவுபடுத்தினார்.

இறைவன் தங்கி வாழும் திருச்சபையின் வெளி அமைப்பை சுட்டிக்காட்டும் இரு தமிழ்ச் சொற்கள் கோவில் மற்றும் ஆலயம் என்பனவாகும். கோவில் அல்லது கோயில் என்பது கோ மற்றும் இல் என்ற இரண்டு சொற்களின் இணைப்பு ஆகும். கோ+இல்= கோவில். கோ என்றால் கோன் அல்லது அரசன் என்பது பொருள். இறைவனை அரசனாக குறிப்பிடுகின்றோம். இல் என்றால் இல்லம் அல்லது வீடு என்பதன் சுருக்கமாகும். இவ்வாறாக இறைவன் தங்கியிருக்கும் இடத்தை கோயில் என தமிழர்கள்

அழைத்தனர். கோவில் என்னும் சொல்லே இரண்டு சொற்களின் இணைப்பால் இலக்கணப் பிழையின்றி அமைந்துள்ளது என நாம் அறிவோம்.

ஆலயம் என்பதை இரண்டு விதங்களில் பொருள் கொள்ளலாம். 1. ஆன்மா இறைவனோடு இலயித்திருக்கக்கூடிய இடம். Æü ஆ என்றால் பசு என்பது பொருள். பசுவை இந்துக்கள் ஆண்டவனாக வழிபட்டு வந்தார்கள். பசுக்கள் கூட்டமாக ஓய்வெடுக்கும் மரத்தடி நிழல் பகுதிகளை ஆலயம் என அழைக்கத் தொடங்கினர். இவ்வாறே ஆண்டவன் இலயித்திருக்கக்கூடிய இடத்தை ஆலயம் என்று அழைக்கிறோம்.

கடவுளின் பிரசன்னம் அல்லது கடவுளின் உடனிருப்பு ஆலயத்தில் அமைந்துள்ளது என்று நாம் பழங்காலம் முதலே விசுவசித்து உணர்ந்து வருகிறோம். பழைய ஏற்பாட்டில் பல்வேறு நிகழ்வுகளில் ஆலயத்தில் இறைவன் காட்சி அளித்ததை வாசிக்கக் கேட்டிருக்கிறோம். இறைவனின் இருப்பிடத்தையும் உடனிருப்பையும் சுட்டிக் காட்டுவதற்கு ஆலயங்கள் எழுப்பப்பட்ட

நிகழ்வுகளையும், இறை இல்லம் என பெயரிடப்பட்ட பல்வேறு நிகழ்வுகளையும் திருவிவிலியத்தில் காண்கிறோம்.

மேலும் பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் இறைவனின் உடனிருப்பை உணர்ந்து கொள்வதற்காக உடன்படிக்கைப் பேழையை சென்ற இடமெல்லாம் தூக்கிச் சென்றார்கள். இறுதியில் எருசலேம் ஆலயம் நிறுவப்பட்ட போது இறைவனின் இருப்பிடமாக தாங்கள் கருதி வந்த உடன்படிக்கைப் பேழையை இறைவனின் இல்லமாகிய எருசலேம் தேவாலயத்தில் நிறுவினர்.

„எங்கே இரண்டோ மூன்றோ பேர் என் பெயரால் கூடியிருக்கிறார்களோ, அவர்களுடைய மத்தியில் நான் இருக்கிறேன்“ என்று கூறிய இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறார் என்ற ஒரு நிலையை திருவிவிலியத்திலிருந்து அறிந்து கொள்கின்றோம். தொடர்ந்து தன்னுடைய உண்மையான உடனிருப்பு ஆலயத்தில் நற்கருணையில் இருக்கிறேன் என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாமே நமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

www.malankaralibrary.com

இவ்வாறாக இறைவனின் உடனிருப்பை உணர்ந்திடும் இடத்தை ஆலயம் அல்லது ஆலயம் போன்ற அமைப்புகளாக புரிந்து கொள்கிறோம். தற்காலத் திருச்சபையில் பல்வேறு ஆலய அமைப்புகளை நாம் காண்கிறோம். அவை அடையாளங்களாகவோ, உருவங்களாகவோ, ஓவியங்களாகவோ, கட்டிட அமைப்புகளாகவோ அமைந்துள்ளன. நாம் பயணம் செய்யும்போது ஏதேனும் இத்தகைய அமைப்புகளை காணும் போது இயல்பாகவே வணக்கமும் மரியாதையும் செலுத்துகிறோம். இவ்வாறு செயல்படும்போது இறைவனின் இருப்பிடம் அங்கே உள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம்.

Àü வழியோரச் சிலுவைகள்: சந்திப்பு, மலை அல்லது நிலப்பரப்பின் உயரமான பகுதி அல்லது நம் வீடுகளின் முற்பகுதியில் சிலுவை அல்லது கிறிஸ்தவ அடையாளங்களை அமைக்கின்றோம். இவற்றைக் காண்கின்ற போது நம்முடைய உள்ளத்திலே இறைவனின் உடனிருப்பை உணர்கிறோம்.

www.malankaralibrary.com

Ãü குருசடி: குருசடி என்பது மக்கள் எளிதில் வந்து செபிப்பதற்கு வசதியாக கிறிஸ்தவ அடையாளங்களுடன் அமைக்கப்படும் சிறு கட்டிட அமைப்பாகும். குருசடிகளில் வந்து ஜெபிக்கும் போதும் இறைவனின் உடனிருப்பை மக்கள் உணர்ந்து இறையருளை பெற்றுக் கொள்கின்றனர்.

Ãÿ சிற்றாலயங்கள்: இறைக்காட்சியைப் பெற்றதன் நினைவாக சிற்றாலயங்கள் எழுப்பப்படுகின்றன. துறவு சமூகத்தினரின் இல்லங்களில் இறைவனின் பிரசன்னத்தை உணர்ந்து கொள்வதற்காகவும் சிற்றாலயங்கள் அமைக்கப்படுகின்றன. தற்போது ஆராதனை ஆலயங்களும் இத்தகைய பொருளிலேயே அமைக்கப்படுகின்றன.

ŒĔ ஆலயம் (Parish) : திருச்சபை அல்லது பங்கு சமூகம் இறைவனை வழிபட ஒன்றுகூடும் இடமே பங்கு ஆலயம். திருச்சபையின் நிர்வாக அமைப்பு இங்கே முக்கியத்துவம் வாய்ந்தது. இறைவனின் உடனிருப்பைப் பிரதிபலிக்கின்ற அனைத்து விதமான திருவழிபாட்டு நிகழ்வுகளும் இங்கே

www.malankaralibrary.com

நடத்தப்படுகின்றன. ஆயரின் அனுமதியோடு மட்டுமே இத்தகைய ஆலயம் பங்கு என்னும் நிலைக்கு உயர்த்தப்படுகின்றது.

œü பேராலயம்: பேராலயம் என்பது ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கும் திருத்தந்தையால் அங்கீகரிக்கப்பட்ட மறைமாவட்ட ஆயரின் இருப்பிட பங்கு ஆலயமாக உள்ளது.

–ü பெருங்கோவில் (Basilica): அழகிய வேலைப்பாடுகளுடனும் கலைநயத்துடனும் கட்டப்பட்ட, மற்றும் சிறப்பு வரலாற்று முக்கியத்துவம் கொண்ட ஆலயத்தை பெருங்கோவில் என்று நாம் அழைக்கிறோம். பெருங்கோவில் என அழைக்கப்பட வத்திக்கான் திருஅவையிலிருந்து முறைப்படியான அங்கீகாரத்தை பெற்றிருக்க வேண்டும். தமிழகத்தில் இத்தகைய பெருங்கோவில்கள் சென்னையில் சாந்தோம், வேளாங்கண்ணி மற்றும் பூண்டி என்னுமிடங்களில் அமைந்துள்ளன.

மேற்குறிப்பிட்டவாறு ஆறு விதங்களில் ஆலயங்களின் அமைப்பு இருப்பினும் இவை

www.malankaralibrary.com

அனைத்துமே ஆலயம் மற்றும் இறைவனின் இல்லம் என்பதன் முக்கியத்துவத்தை கொண்டுள்ளன. எந்த அமைப்பில் இருந்தாலும் இறைவனின் இருப்பிடமான ஆலயங்களை முற்றிலுமாக புதிதாக்க வேண்டும் என்பதுவே ஹூதோஸ் ஈத்தோ தினத்தின் பொருளாகும்.

புதிதாக்குதல் என்றால் என்ன? புதிதாக்குதல் என்பது புதியதாக அமைத்தல் என்பதல்ல. பழைமையில் புதுமையை நாம் காண வேண்டும். பழைமையில் புதுமையை காண்கின்ற போது நம் கண்களுக்கு அது இனிமையை தருகிறது. கேட்பதற்கும் நமக்கு குளிர்ச்சியை தருகிறது. மனதிற்கும் இதமாக அமைகிறது.

ஒரு நபர் இந்த உலகத்திலேயே வாழ்கின்ற போது அடிக்கடி நோய்கள் வருகின்றன. நோய்கள் நீங்க அதற்கான மருந்துகளை பெற்றுக் கொள்கின்றோம். உடல் நிலையானது மிகவும் உற்சாகமாகிறது.

இவ்வாறே நாம் பயன்படுத்தக்கூடிய நம்முடைய ஆலயங்களில் ஒரு சில

நேரங்களில் பருவ காலநிலை காரணமாக கறைகள் மற்றும் கரும்புள்ளிகள் உருவாகின்றன. இத்தகைய கரும்புள்ளிகள் மற்றும் அழுக்குகள் நிறைந்த இடங்களை தண்ணீரால் கழுவி தூய்மைப்படுத்தி சுத்தப்படுத்தி மிகவும் தூய்மையாக வைத்திருக்க முயல வேண்டும். கரும்புள்ளிகள் மற்றும் அழுக்குகள் நீக்காமல் புது வண்ணம் தீட்ட வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட்டு கழுவி தூய்மைப்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். நவீன வண்ணங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் அனைத்தும் கறைகளை கழுவி தூய்மைப்படுத்தும் நிலைக்கு முற்றிலும் பல ஆண்டுகள் வரை உத்திரவாதம் தருகிறார்கள்.

மேலும் இச்செயலை பங்கு மக்களாகிய நாமே இதனை செய்யும் போது பணச்செலவும் மிச்சம், மக்களின் பங்கேற்பும் கூடும், நாமே தூய்மைப்படுத்தினோம் என்ற திருப்தி, ஆலயத்தோடும் ஆலயம் சார்ந்த நிகழ்வுகளுக்கும் அதிக ஆர்வம் போன்றவை நம்மிடையே உருவாகின்றன. இவ்வாறாக

www.malankaralibrary.com

பழைமையில் புதுமையை நாமே அனுபவிக்க முடிகிறது.

அன்பான சகோதர சகோதரிகளே நம்முடைய ஆலய சுற்றுப்புறங்களை நாம் கவனிப்போம். பல நபர்கள் வந்து செல்லக்கூடிய ஆலயம். இந்த உலகத்திற்கு எல்லாம் அதிபதியான ஆண்டவர் தங்கியிருக்கக் கூடிய ஆலயம். இந்த ஆலயத்தின் சுற்றுப்பகுதியை நாம் எந்த அளவுக்கு நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பல ஆயிரங்கள் பல லட்சங்கள் செலவு செய்து அலங்காரங்கள் செய்வதை விட அழகிய செடிகளை நட்டு வளர்த்துவது எவ்வளவோ மேலானது. இவ்வாறு இறைவனின் இயற்கையான படைப்போடு இணைந்து நாம் தூய்மை காண முடியும். நம் மறைமாவட்டத்தில் குலசேகரம் மறைவட்டத்தில் ஆலய சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருப்பதை திட்டங்கள் தீட்டி அதனை செயல்படுத்தி வெற்றியும் கண்டிருக்கின்றார்கள். அத்துடன் ஆலய வெளி மற்றும் உள் அமைப்புகளை சீராக ஒழுங்குபடுத்தி, ஆவணங்களை சீர் செய்து, ஆலய வரலாற்றையும் எழுதி, ஆலயத்தின் புதுப்பித்தலை செயல்படுத்த நாம் முயல்வோம்.

www.malankaralibrary.com

உலகிலேயே புகழ் பெற்ற கொளோன் நகர பேராலயத்தில் பராமரிப்புப் பணிகள் எப்போதும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அதற்காக அமைக்கப்படும் சாளரங்கள் இல்லாமல் ஒருபோதும் இப்பேராலயத்தை காண முடியாது. எனவே ஆலயத்தை புதுமையாக்குதல் அல்லது பராமரித்தல் ஒரு போதும் இழிவான செயல் அல்ல.

நம் வீட்டை அழகாக நம்மால் பராமரிக்க முடிகிறதென்றால் நிச்சயமாக நம் ஆலயத்தையும் அழகாக பராமரிக்க நம்மால் முடியும். இதுவே பழைமையில் புதுமை காண்பதன் பொருளாகும்.

**—ச்சக்கரியாவுக்கு தூதறிவித்தல் தினம்**

திருமுழுக்கு யோவானின் பிறப்பு பற்றி வானதூதர் சக்கரியாவுக்கு தூதறிவித்தல் நிகழ்வை இன்று திருச்சபையில் நினைவு கூர்கின்றோம். சக்கரியா என்பவர் யார்? திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் சக்கரியா எனப் பெயர் கொண்ட பல நபர்களை காண்கின்றோம்.

www.malankaralibrary.com

அற்றுள் மிக முக்கியமாக சக்கரியா என்னும் பெயர் கொண்ட நான்கு நபர்கள் உள்ளனர்.

முதலாவதாக இஸ்ரயேலின் அரசனாம் சக்கரியா. பழைய ஏற்பாட்டு நூலில் இஸ்ரயேல் மக்களின் பதினான்காவது அரசராக சக்கரியா ஆட்சி செய்து வந்தார். இவர் கொடுங்கோலனாக தீய அரசன் என்ற பெயரோடு ஆட்சி புரிந்ததால் ஆறு மாத காலம் மட்டுமே தன் அதிகாரத்தை தக்க வைக்க முடிந்தது. இறுதியில் அவரது படைவீரர்களே அவரை கைது செய்து கொன்று அதிகாரத்தை பறித்ததாக திருவிவிலியம் குறிப்பிடுகிறது.

இரண்டாவதாக இறைவாக்கினராம் சக்கரியா. பழைய ஏற்பாட்டு நூலில் காணப்படும் பன்னிரண்டு இறைவாக்கினர்களுள் பதினொன்றாம் இறைவாக்கினராக குறிப்பிடப்படுகிறார். குறிப்பாக கிறிஸ்துவுக்கு முன் ஐந்தாம் நூற்றாண்டுகளில் இறைவாக்குப் பணி செய்த சக்கரியா இறைவாக்கினர் யூதர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து எருசலேம் ஆலயம் கட்ட வேண்டியதன்

www.malankaralibrary.com

முக்கியத்துவத்தையும் பொறுப்புணர்வைப் பற்றியும் அவர் இறைவாக்குரைத்தார்.

மூன்றாவதாக யோயோதாவின் மகன் சக்கரியா. பழைய ஏற்பாட்டு நூலில் குறிப்பிடப்படும் தலைமைக்குரு யோயோதாவின் மகனான சக்கரியா எனப்படும் குருவானவர் அரசர்களுக்கு எதிராக இறைவாக்குரைத்ததால் ஆலய முற்றத்திலேயே கொல்லப்பட்டவர். இவரது கல்லறை இப்போதும் எருசலேம் நகரில் காணக் கிடக்கின்றது.

நான்காவதாக எலிசபெத்தின் துணைவரான சக்கரியா. நாம் இன்றைய தினம் வாசிக்க கேட்ட புதிய ஏற்பாட்டின் இறைவார்த்தைப் பகுதியில் செக்கரியா குருவானவராக முதிர்ந்த வயதில் தான் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்வதாக இறைதூதர் வழியாக அறிவிப்பை பெற்றுக்கொள்கிறார்.

சக்கரியா ஒரு குருவானவர். அபியா வகுப்பைச் சார்ந்த ஆரோனின் குருத்துவ வழிமரபில் பிறந்தவராவார். இவர்

இயேசுவின் உறவினரான எலிசபெத்தின் கணவராவார். இஸ்லாமியர்களும் திருமுழுக்கு யோவானின் தந்தையான சக்கரியாவை முக்கியமான ஒரு நபராக கற்பிக்கிறார்கள்.

சக்கரியா செப்டம்பர் மாதத்தில் எருசலேம் ஆலயத்தில் இறைவனுக்கு தூபம் காட்டுகின்ற வேளையில் இறைதூதர் வழியாக திருக்காட்சியைப் பெற்றுக் கொள்கிறார். திருமுழுக்கு யோவானின் பிறப்பு ஜூன் மாதம் 24 ஆம் நாளில் கொண்டாடுகின்றது. அவ்வாறாக செப்டம்பர் மாதம் 23 ஆம் நாளில் திருமுழுக்கு யோவான் கருத்தரித்த தினமாக திருச்சபை கொண்டாடுகிறது. அவ்வாறே திருமுழுக்கு யோவான் கருத்தரித்து ஆறு மாதங்களுக்கு பின்னர் மரியா இயேசுவை கருத்தரித்ததாக நாம் அறிகிறோம்.

திருவிவிலியத்தில் முதல்முறையாக ஆபிரகாமை வரவேற்று உபசரித்ததாக மெல்கிசதேக்கு என்னும் தலைமைக்குருவானவரைப் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். ஆரோனின்

வழிமரபினரான அபியா வகுப்பைச் சார்ந்த செக்கரியா வாழ்ந்த காலத்தில் 7000 க்கும் மேற்பட்ட குருக்கள் இஸ்ரேலில் பணியாற்றியதாக கருதப்படுகிறது. 24 குழுக்களாக பிரித்து ஒவ்வொரு ஆண்டும் இருமுறை ஒரு வார கால தூயகத்துள் தூபம் காட்டும் பணியை ஆலயத்தில் செய்து வந்தனர்.

யூதர்களின் வாழ்வில் யோம்-கிப்பூர் என்பது புனிதமான ஒரு நோன்பு ஆகும். இந்த நாளில் முழுவதுமாக நோன்பிருந்து ஆலயத்துள் அமர்ந்திருந்தவாறு மன்றாடுவார்கள். இந்த முக்கியமான செப நாளில் தான் சக்கரியாவுக்கு எருசலேம் ஆலயத்தில் தூபம் காட்டுகின்ற வேளையில் திருக்காட்சி பெற்றதாக பல்வேறு கிழக்கு மரபுத் திருச்சபையினர் குறிப்பிடுகின்றனர். செக்கரியா இந்த முக்கியமான நாளில் தூபம் செலுத்த வேண்டிய பணியை முதன்மைக் குருத்துவப் பணியாக செய்ய வேண்டியதால் தான் திருத்தூயகத்துள் நுழைய அனுமதி கொண்டிருந்தார் என நம்பப்படுகிறது.

www.malankaralibrary.com

திருமுழுக்கு யோவானின் பிறப்பு மிக முக்கியமானது என்பதையும் திருமுழுக்கு யோவான் இயேசு கிறிஸ்துவின் பணிவாழ்வை ஆயத்தம் செய்வதற்காக அனுப்பப்பட்டவர் என்ற முக்கியத்துவத்தை குறிப்பிடுவதற்காகவும் வானதூதர்களுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நபரே இதனை இறைவனிடமிருந்து மனிதர்களுக்கு தெரிவிக்கின்றார். மிக முக்கியமான தலைமை வானதூதர்களுள் ஒருவரான கபிரியேல் வானதூதர் தான் சக்கரியாவுக்கு தோற்றமளிக்கின்றார்.

நேர்மையும் இறைப்பற்றும் கொண்டவரான சக்கரியா இறைவனின் தூதரின் வார்த்தைகளை நம்பாததால் தான் அடையாளமாகவும் தண்டனையாகவும் ஊமை நிலையை அடந்தார் என குறிப்பிடப்படுகிறது.

கிறிஸ்து பிறப்பின் போது இரண்டு வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளும் கொல்லப்பட்ட போது ஏரோதின் படைவீரர்கள் சக்கரியாவிடம் அவரது குழந்தையைப் பற்றிக் கேட்டனராம். தன் குழந்தையை பாதுகாப்பாக மறைத்து வைத்திருந்த இடத்தை வெளிப்படுத்த மறுத்ததால் கொல்லப்பட்டதாக கிழக்குத் திருச்சபை

www.malankaralibrary.com

மரபுகள் வெளிப்படுத்துகின்றன. சக்கரியாவின் கல்லறை கிதரோன் சமவெளியில் அமைந்திருப்பதாக கண்டறிந்தனர்.

தலைமைக் குருவாகிய கிறிஸ்து தனது இறைமக்களை "ஆட்சி உரிமை பெற்றவர்களாக, தம் கடவுளும் தந்தையுமானவருக்கு ஊழியம் புரியும் குருக்களாக ஏற்படுத்தினார்" (தி. வெ. 1 : 6; காண் 5 : 9, 10). "ஏனெனில், தம் மறுபிறப்பாலும், தூய ஆவியின் பொழிதலாலும் திருமுழுக்குப் பெற்றவர்கள் அருள் இல்லமாகவும், தூய திருப்பணி நிலையினராகவும் திருநிலைப்படுத்தப் பெற்றுள்ளனர்" •திருச்சபை . 10).

குருக்கள் என்பவர்கள் குருத்துவம் என்னும் அருட்கொடை வழியாக தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களை இறையாட்சி புரியவும், இறைவனுக்கு ஊழியம் புரியவும் நியமிக்கப்பட்டவர்கள்.

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத் தொகுப்பு பின்வருமாறு கூறுகிறது, ⋖பணியாற்றும் திருப்பணியாளர் தாம் பெற்ற தூய அதிகாரத்தால் .... எல்லா மக்கள் பெயராலும் கடவுளுக்கு அதை ஒப்புக்கொடுக்கிறார். நம்பிக்கை

கொண்டோரோ தம் அரசத் திருப்பணி நிலையால் நற்கருணைப் பலியை ஒன்றித்து ஒப்புக்கொடுக்கின்றனர்" (திருச்சபை 10).

இவ்வாறு குருக்கள் இறை ஊழியத்துக்காக அழைக்கப்பட்டவர்கள். இவர்கள் புனிதர்களல்ல. புனிதத்துக்கு ஊழியம் செய்பவர்கள். அப்புனிதத்தை சிறுதளவேனும் பெற்றுக் கொள்ள முயல்பவர்கள்.

சக்கரியாவும் குருவானவர். அவரே இறைவார்த்தைகளை நம்ப ஐயங்கொண்டார். ஆனால் இறைத்தண்டனைக்கு உள்ளாவார். இன்று திருச்சபையை வழிநடத்தும் குருக்களும் இறைவார்த்தைகளுக்கு ஐயங்கொள்ளவும் நெறிதவறிய வாழ்வு வாழும்போதும் இறைத்தண்டனைக்கு உள்ளாவர். இதனையே பழைய ஏற்பாட்டு தாவீது போன்ற இறைவாக்கினர்களின் வாழ்க்கையிலும் கேட்டிருக்கின்றோம்.

## **"ப்தூய பெரிய யாக்கோபின் தினம்**

யாக்கோபு என்னும் பெயர்ச்சொல் பழைய தமிழ் மொழிபெயர்ப்பில் யாகப்பர் எனப்படுகிறது. போர்த்துக்கீசிய மொழியின்

www.malankaralibrary.com

பின்னணியில் தமிழில் சந்தியாகப்பர் என்னும் சொல் பயன்படுத்தும் வழக்கமும் இருந்து வந்தது. „சந்தியாகோ" என்னும் சொல்லுக்கு புனித யாகப்பர் என்பது பொருள். ஆங்கிலத்தில் இப்பெயரை ஜேம்ஸ் எனவும் ஜேக்கப் எனவும் அழைத்தனர். ஆனால் கிழக்குத் திருச்சபையினர் யாக்கோபு என்னும் சொல்லையே ஆதி முதல் பயன்படுத்தி வருகின்றனர். மலங்கரை திருச்சபை ஏப்பிரல் 30 ல் இத்திருத்தூதரை நினைவு கூருகின்றது.

திருத்தூதர்களுள் இரு யாக்கோபுமார்கள் உள்ளனர். அல்பேயுவின் மகன் யாக்கோபு அல்லது சிறிய யாக்கோபு மற்றும் செபதேயுவின் மகன் யாக்கோபு அல்லது பெரிய யாக்கோபு ஆவர். நாம் தற்போது செபதேயுவின் மகன் யாக்கோபு பற்றிய கருத்துக்களைக் காண்போம்.

செபதேயுவின் மகனான பெரிய யாக்கோபு கி.பி 44 ல் இறந்ததாக நம்பப்படுகிறது. இவரது பெற்றோர் செபதேயு மற்றும் சலோமி ஆவர். இவர் திருத்தூதரான புனித யோவானின் சகோதரரும் ஆவார்.

இயேசு அழைத்த முதல் சீடர்களுள் ஒருவராக பெரிய யாக்கோபு உள்ளார். இயேசுவின் உருமாற்ற நிகழ்வின் போது இருந்த மூவருள் இவரும் ஒருவராவார். திருத்தூதர் பணிகள் 12:2 இன் படி ஏரோது அரசன், இவரை தன் வாளால் கொன்றதாக குறிப்பிப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இவரது இறப்பு மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே பன்னிரு திருத்தூதர்களில் இவரே முதல் மறைசாட்சி ஆவார்.

போர்த்துகீசியர்களின் வருகையால் ஆப்பிரிக்காவின் காங்கோ நாட்டில் திருத்தூதர் யாக்கோபுவின் பக்தி முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. திருத்தூதர் யாக்கோபின் தினத்தன்று இந்நாடு தேசிய விடுமுறையாக்கி கொண்டாடி வருகின்றது.

ஸ்பெயின் நாட்டின் வடக்குப் பகுதியில் திருத்தூதர் பெரிய யாக்கோபு நல்லடக்கம் செய்யப்பட்ட சந்தியாகோ-தே-கம்போஸ்டலாவிலுள்ள பேராலயத்தை நோக்கிய திருப்பயணத்திற்குத் தான் „புனித யாக்கோபின் பாதை“ என்பது பெயர்.

www.malankaralibrary.com

எருசலேமிலிருந்து போலந்து, ஜெர்மனி, நெதர்லாந்து, பிரெஞ்சு, இத்தாலி, ஆஸ்திரியா மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் வழியாக இறுதியில் ஸ்பெயின் நாட்டை வந்தடைகிறது.

ஸ்பெயின் நாட்டு எல்லையில் இருந்து ஆரம்பிக்கக்கூடிய பாதையைத்தான் மிகவும் முக்கியமான „புனித யாக்கோபின் பாதை" என ஸ்பெயின் நாட்டு மக்கள் கருதுகின்றார்கள். இந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த திருப்பயணப்பாதை கிழக்கு ஸ்பெயின் எல்லையில் இருந்து துவங்கும். ஏறக்குறைய 800 கிலோமீட்டர் நீளமுள்ள பாதை ஆகும். போர்த்துக்கல் நாட்டு லிஸ்பன் பேராலயத்தில் இருந்து ஆரம்பித்து ஏறக்குறைய 600 கிலோமீட்டரில் சந்தியாகோ தே கம்போஸ்டலாவை அடையக்கூடிய திருப்பயணப் பாதையும் முக்கியமானதாக கருதப்படுகிறது. 5 முதல் 1500 கிலோமீட்டர் வரை நடந்து திருப்பயணத்தில் பங்கேற்கின்றனர். பிரெஞ்சு நாட்டின் பாரிசு நகரிலிருந்து ஏறக்குறைய 1500 கிலோமீட்டர்

www.malankaralibrary.com

தூரத்தை கடக்க மூன்று மாதங்கள் நடைபயணம் மேற்கொள்வர்.

திருப்பயணப்பாதையில் நடக்க விரும்புவர்கள் பெயர் விபரங்கள் அனைத்தும் எழுதப்பட்ட கடவுச் சீட்டு ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும். முத்திரை பதிக்கப்பட வேண்டிய சந்திப்புக்கள் அவர்களிடம் தெரிவிக்கப்படும். அந்த இடத்தை சென்றடைந்தவுடன் கடவுச்சீட்டில் முத்திரையை பெற்றுக்கொள்ள வேண்டும். இறுதியில் சந்தியாகோ-தே-கம்போஸ்டலா பேராலய அலுவலகத்திலிருந்து கடவுச்சீட்டை சான்றாக காட்டி சான்றிதழை பெற்றுக் கொள்கிறோம். ஏராளமான இளம் வயதினர் ஆர்வமுடன் இத்திருப்பயணத்தில் பங்கேற்கின்றனர். இந்த சான்றிதழை பெற்றுக் கொள்வதை பெருமையாகவும் கருதுகின்றனர்.

சந்தியாகோ-தே-கம்போஸ்டலா பேராலயத்தில் திருத்தூதர் யாக்கோபுவை அடக்கம் செய்யப்பட்டது பற்றிய ஏராளமான கருத்துக்கள் நிலவி வருகின்றன. கிறிஸ்துவுக்குப் பின்னர் திருத்தூதர் யாக்கோபு ஸ்பெயின் நாட்டில் கிறிஸ்துவை

www.malankaralibrary.com

போதித்து வந்தார். அன்னை மரியாள் அவருக்கு காட்சியில் யூதேயா நாட்டில் மறைபணி செய்ய வேண்டும் என வெளிப்படுத்தியதால் அவர் தனது சீடர்களுடன் மறைபணிக்காக யூதேயாவுக்கு பயணமாகிறார். அங்கே கிறிஸ்துவை போதிக்கும் போது யூதர்களால் தலை வெட்டப்பட்டு கிறிஸ்துவுக்காக கி.பி. 44ஆம் ஆண்டு மறைசாட்சி ஆகிறார்.

அவரது சீடர்கள் உடலை எருசலேமிலிருந்து கடல் வழியாக ஸ்பெயின் நாட்டுக்கு கொண்டு வரும் போது கப்பலானது மிகப்பெரிய புயல் மற்றும் மழையால் விபத்துக்குள்ளாகியது. சேதமடைந்த கப்பலிலிருந்து திருத்தூதர் யாக்கோபின் உடல் கடலில் தவறி விழுகிறது. ஆனால் ஒரு சில நாட்களுக்குப் பின்னர் எவ்வித சேதமுமின்றி கடற்கரையில் மிகவும் பாதுகாப்பாக, சிப்பிகளால் அலங்கரிக்கப்பட்டவாறு அவரது உடல் காணப்பட்டது. அவரது சீடர்கள் உடலை சந்தியாகோ-தே-கம்போஸ்டலா என்ற இடத்தில் அடக்கம் செய்தனர். எனவே தான் சிப்பியை திருத்தூதர் யாக்கோபின் அடையாளமாக பயன்படுத்துகிறோம். யாக்கோபின் சிப்பி என்பது இதன் பெயர். முற்காலங்களில் திருப்பயணத்தை

மேற்கொள்பவர்கள் கடற்கரையிலிருந்து சிப்பி ஒன்றை நினைவாக வீட்டுக்கு கொண்டு செல்வது வழக்கம். தற்போது திருப்பயணத்தை மேற்கொள்பவர்கள் சிப்பி ஒன்றை கழுத்தில் அணிந்தோ அல்லது பையில் ஏதேனும் ஒரு இடத்தில் பதித்து வைத்தவாறு பயணம் செய்வார்கள்.

„கமீனோ-சந்தியாகோ" என ஸ்பெயின் மொழியில் இத்திருப்பயணத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. „கமினோ" என்றால் திருப்பயணம் என்பது அர்த்தம். „சந்தியாகோ" என்பது புனித யாக்கோபு என்பதன் ஸ்பெயின் மொழிச் சொல் ஆகும்.

சில இடங்களில் கரடுமுரடான பாதையாகவும், மலைப்பாதையாகவும், மிகவும் சரிவான தாழ்வான பாதையாகவும் அமைந்துள்ளது. தவறி விழாமலிருக்க தங்களுடைய கைகளில் கைத்தடியும் கொண்டு செல்வது வழக்கம்.

சந்தியாகோ-தே-கம்போஸ்டலாவில் பேராலயத்தில் திருத்தூதர் யாக்கோபு அடக்கம் செய்யப்பட்டிருக்கும் கல்லறையின் மேல் பகுதியில் திருத்தூதர் யாக்கோபின் உருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீண்ட வரிசையில் காத்து நின்று உருவத்தை

www.malankaralibrary.com

கட்டியணைப்பதை அரிய பெரிய பாக்கியமாக கருதுவார்கள்.

இங்கே உலகிலேயே மிகப்பெரிய தூபகலசம் பயன்படுத்தப்படுகிறது. ஏழு நபர்கள் ஒன்றாக சேர்ந்து தூபகலசத்தை தொங்கவிடப்பட்டு இருக்கக்கூடிய கயிற்றை இழுத்தவாறு பலிபீடத்திற்கு தூபம் காட்டுவார்கள்.

திருத்தூதர் யாக்கோபு எருசலேமில் மறைபணியாற்றி ஒரு திருச்சபை சமூகத்தை நிறுவி அவர்கள் இறைவனை வழங்குவதற்காக திருவழிபாட்டு முறை ஒன்றையும் அறிமுகப்படுத்தியதாக வரலாறு கூறுகின்றது. அவர் ஆரம்பித்த அந்த திருவழிபாட்டு முறையின் பிற்கால மேம்படுத்தப்பட்ட வடிவத்தையே நாம் இன்றும் நமது திருவழிபாட்டு முறையில் பயன்படுத்தி வருகிறோம். வேளைச் செபங்களில் மார் யாக்கோபின் போஹூஸோ எனப்படும் பாடல்கள் திருத்தூதர் யாக்கோபுவால் எழுதப்பட்டவை எனவும் நம்பப்படுகிறது.

திருத்தூதர் பெரிய யாக்கோபுவின் மறைபணி ஆர்வம் கிறிஸ்தவர்களாகிய

www.malankaralibrary.com

நமக்கும் மிகப்பெரிய எடுத்துக்காட்டாகும். அவரது மறைபணி ஆர்வம் திருமுழுக்குப் பெற்ற நம் ஒவ்வொருவரும் கட்டாயமாக கொண்டிருத்தல் அவசியாமாகும். அப்படியாயின் இந்தியாவில் கிறிஸ்தவம் மலர நாம் இணைந்து செயல்படுவோம்.

## À.ப்தூய ஸ்தேவான் தினம்

திருச்சபையின் முதல் மறைசாட்சியாக கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்ததால் கொல்லப்பட்டு திருவிவிலியத்தில் குறிப்பிடப்படுகின்றவரே மறைசாட்சி புனித ஸ்தேவான் ஆவார். ஸ்தேவான் என்னும் சொல்லின் பொருள் கிரீடம் என்பது ஆகும்.

ஸ்தேவான் என்ற சொல்லை ஸ்டீபன் என ஆங்கிலத்திலும், நம் திருவழிபாட்டு மொழியான சுறியானி மொழியில் ஸ்தேஃபானோஸ் எனவும் கூறுகின்றோம். கிரேக்க மொழியிலும் ஸ்தேஃபானோஸ் எனவே அழைக்கப்படுகிறது.

www.malankaralibrary.com

இவரை அடக்கம் செய்யப்பட்ட கல்லறையானது எருசலேமுக்கு அருகே காபார் கமாலா என்னும் ஊரில் உள்ளதாக லூசியன் என்ற குருவானவருக்கு இறைவன் வெளிப்படுத்தியதாக நம்பப்படுகிறது. ஆனால் இது உண்மையாகவே அவரது கல்லறையா என்பது இதுவரையிலும் தெளிவாக எடுத்துக் கூறப்படவில்லை.

இவரது திருநாள் டிசம்பர் 26 ஆம் நாளில் மேற்குத் திருச்சபையினரால் கொண்டாடப்பட்டு வருகிறது. சில கிழக்குத் திருச்சபைகள் 27 நாளிலும் இவரது திருநாளை கொண்டாடி வருகின்றது. ஆனால் மலங்கரை கத்தோலிக்க திருவழிபாட்டில் நாம் ஜனவரி மாதம் எட்டாம் நாளில் இவரது திருவிழாவை நினைவு கூறுகின்றோம்.

கிரிகோரியன் நாட்காட்டியின் படியாக ஸ்தேவான் தினமானது ஜனவரி 9ஆம் நாளிலும் கொண்டாடப்பட்டு வந்ததாக கருதப்பட்டு வருகிறது. ஆனால் மேற்கு திருச்சபையினர் கிறிஸ்துமஸ் தினத்திற்கு அடுத்த நாளை ஸ்தேவான் தினமாக தற்போதும் கொண்டாடி மகிழ்ந்து வருகிறார்கள்.

கிறிஸ்துமஸுக்கு அடுத்த இந்த நாளை ஒரு சில நாடுகள் இரண்டாம் கிறிஸ்துமஸ்

திருநாள் என்றும் புனித ஸ்தேவான் தினம் என்றும் அழைத்து கொண்டாடுகிறார்கள். இத்தினத்தை பல்வேறு ஐரோப்பிய நாடுகள் இப்போதும் முக்கிய அரசு விடுமுறை நாளாக அறிவித்துள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் வித்தியாசமாக இத்திருநாள் பல பெயர்களில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தாலி நாட்டில் இந்த திருவிழா மிக முக்கியமானதாக கொண்டாடப்பட்டு வருகிறது. கிறிஸ்துமஸ் தினத்தன்று இத்தாலியர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களோடு இணைந்திருந்து அனைவரும் ஒன்றாக மகிழ்வுடன் கிறிஸ்துமஸ் விழாவை கொண்டாடுகின்றனர். ஆனால் ஸ்தேவான் தினத்தன்று அனைவரும் தங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேறி நகர வீதிகளிலும் தெருக்களிலும் அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்துமஸ் அலங்கார விளக்குகளை கண்டு களிக்கவும் உறவினர்களோடும் நண்பர்களோடும் பேசி மகிழவும் பிறரை சந்திக்கவும் செய்யக்கூடிய முக்கிய திருவிழாவாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. நம்மூரில் கொண்டாடப்படும் „காணும் பொங்கல் திருநாள்“ போன்றே கொண்டாடுகிறார்கள். மேலும் இந்நாளில் கிறிஸ்து பிறப்பு நிகழ்வு

www.malankaralibrary.com

மிகப்பெரிய மேடையில் கலை வடிவில் 300 கலைஞர்களால் நடித்துக் காட்டப்படுகிறது. இந்நிகழ்வு மிக முக்கியமானதாகும்.

ஆனால் இந்த நாள் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஸ்தேவான் தினம் என்பதை விட „பாக்சிங் தினம்“ என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. பாக்ஸிங் என்ற விளையாட்டுக்கு இந்த தினத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. „பாக்ஸ் தினம்“ அல்லது தமிழில் „பெட்டி தினம்“ எனப்படுகிறது.

அமெரிக்காவில் இத்தினத்தை மிகவும் அமைதியான ஓய்வு நாளாக கொண்டாடுகின்றார்கள். கிறிஸ்துமஸ் தினத்தன்று பல்வேறு கொண்டாட்டங்களால் சோர்வுற்றவர்கள் ஸ்தேவான் தினமான பாக்சிங் தினம் அல்லது பெட்டி தினத்தன்று அமைதியாக காலியான பரிசு அட்டைப் பெட்டிகளை நோக்கி பார்த்தவாறு அமைதியாக அமர்ந்திருக்கும் சிறப்பியல்பு கொண்டது. அமெரிக்காவின் மரபில் இத்தகைய தியான இருப்பு இந்நாளில் மிக முக்கியமானதாக ஒரு சில பகுதிகளில் கருதப்பட்டு வருகிறது. மிகவும் குறைவான நபர்களே வீதிகளில் உலாவுவார்கள். இவர்கள்

www.malankaralibrary.com

Happy Boxing Day என பிறரை வாழ்த்துவார்கள். பெட்டிகளில் கிடைக்கும் பிக்ஸா போன்ற உணவுப்பொருட்களை இந்நாளில் விரும்பி உண்பர்.

இங்கிலாந்து நாட்டில் ஸ்தேவான் தினமானது அவரது நல்வாழ்வை மையமாகக் கொண்டு கடைபிடித்து வருகிறார்கள். பின்வரும் புராணக் கதை இங்கிலாந்து நாட்டில் கூறப்படுகிறது. வென்சலஸ் என்ற ஒரு அரசர் ஸ்தேவானை போன்று பிறருக்கு உதவி செய்வதற்காக கிறிஸ்துமஸ் தினத்தின் அடுத்த நாளில் தன்னுடைய காலி பரிசுப் பெட்டிகளை வீதிகளில் கொண்டு வந்து குடிமக்களிடமிருந்து ஏராளமான நன்கொடைகளைப் பெற்றுக் கொண்டு தேவைப்படுகின்ற ஏழை மக்களுக்கு வழங்கி வந்தார். இந்நிகழ்வை ஆண்டுதோறும் நினைவு கூர்ந்திட இன்றும் இங்கிலாந்து நாட்டவர்கள் பிறருக்கு உதவி செய்யக்கூடிய „பிறர் உதவி தினமாக“ இதனை அழைத்து கொண்டாடி வருகிறார்கள். திருவருகைக் காலத்தில் தாங்கள் உண்டியலில் சேமித்த பணத்தை இந்நாளில் பிரித்து பிறருக்கு வழங்கி மகிழ்கின்றனர்.

அயர்லாந்து நாட்டில் ஸ்தேவான் தினத்தை றென் தினம் (Wren Day) என

www.malankaralibrary.com

அழைத்து கொண்டாடுகிறார்கள். றென் என்பது சிட்டுக்குருவி இனத்தை சார்ந்த மிக அழகாக பாடக்கூடிய மிகவும் சிறிய வகை கிளி ஆகும். இந்த சிட்டுக்குருவியின் ஓசையானது கேட்பதற்கு மிகவும் இனிமையானது. சிட்டுக்குருவியை வேட்டையாடி பெற்றுக் கொள்வோர் பாக்கியசாலிகள் என்று எண்ணமானது அயர்லாந்து நாட்டு மக்களிடையே பரவலாக உள்ளது. எனவே இந்நாளில் அயர்லாந்து நாட்டு மக்கள் சிட்டுக்குருவியை வேட்டையாடுவதற்காக விரும்பி செல்லக்கூடிய வழக்கம் உள்ளது. அவ்வாறே இந்நாளில் சிட்டுக்குருவியை போன்று வேடம் அணிந்தவாறு வீதிகளில் உலா வருவதும் மிகப்பெரிய அலங்கார ஊர்வலங்கள் நடத்துவதும் இந்நாளின் தனிச்சிறப்பு ஆகும்.

ஸ்தேவான் கத்தோலிக்க திருச்சபையில் மிக முக்கியமான முதல் மறைசாட்சி என அழைக்கப்படும் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார். அவரது வாழ்வு எடுத்துக்காட்டான ஒரு வாழ்வாக அமைந்திருந்ததை உணர்ந்த மக்கள் கிறிஸ்து பிறப்பு திருநாளோடு இணைந்து பிறருக்கு உதவி செய்யக்கூடிய மனநிலையில் ஸ்தேவான் திருநாளை கொண்டாட ஆரம்பித்தனர். ஆனால் நாளடைவில் பல்வேறு

www.malankaralibrary.com

நிலைகளில் மாற்றமடைந்த இத்திருநாள் தற்போது வியாபாரத்திற்காகவும் மகிழ்வுக்காகவும் மட்டுமே கொண்டாடக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மரபுத் திருச்சபைகள் புனித ஸ்தேவானை ஆர்ச்சு டீக்கன் அதாவது தலைமைத் திருத்தொண்டர் எனச் சுட்டுகிறது. „சீடர்களால் கைவைப்பேற்றவராம் சகதேர் முன்னவரே யூத குலத்தினுக்கெதிராக திருமறையின் உரை கண்டவரே கல்லெறிவோர்க்காய் செபித்தவரே அருந்திருந்தொண்டர் ஸ்தேவானே ...................“ என நாம் நம் திருவழிபாட்டுப் பாடலில் புனித ஸ்தேவானை போற்றுகிறோம்.

கிறிஸ்து பிறப்பு திருநாளோடு இணைந்து ஸ்தேவான் தினத்தை கொண்டாடுவது மிகவும் பொருள் செறிந்த ஒன்றாகும். கிறிஸ்து எவ்வாறு பிறருக்காக தம் உடைமைகளை பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று தன் வாழ்வின் வழியாக நமக்கு காட்டித் தந்தாரோ அதனை இவ்வுலகில் முதன் முறையாக வாழ்ந்து காட்டியவர் புனித ஸ்தேவான் ஆவார். இத்தகைய நற்செயல்கள் தன்னுயிரை மாய்த்துக் கொள்ள வேண்டிய ஒரு நிலைக்கு சென்றதையும் நினைக்கின்ற போது புனித ஸ்தேவான் திருத்தொண்டர்

www.malankaralibrary.com

என்ற ஒரு நிலையில் இருந்தாலும் திருத்தூதர்கள் போன்றே தன்னுடைய வாழ்வை கிறிஸ்துவுக்காக சமர்ப்பித்து எளிய வாழ்வு வாழ்ந்திருந்தார் என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

கிறிஸ்து பிறப்பு திருநாளின் மகிழ்வில் இருக்கும் நாம் பிறர் உதவி செய்வதற்கான அடையாளமாகவும் வழிகாட்டியாகவும் புனித ஸ்தேவானை ஏற்றுக் கொண்டு உணர்ந்து செயல்பட முயல்வோம்.

## ÀÀüதூய நிக்கோலஸ் தினம்

கிறிஸ்துமஸ் என்றாலே குழந்தை இயேசுவுக்கு அடுத்ததாக நம் எண்ணத்திற்குள் வருவது சாந்தாகிளாஸ் ஆகும். இவர் கிறிஸ்துமஸ் தாத்தா, நாத்தார் தாத்தா, சாந்தா கிளாஸ், ஆயர் நிக்கோலஸ், பேராயர் நிக்கோலஸ் மற்றும் புனித நிக்கோலஸ் எனப் பலப்பெயர்களில் அறியப்படுகிறார். புனித நிக்கோலஸ் கிழக்குத் திருச்சபையைச் சார்ந்த புனிதரும் ஆயருமாவார். எபேசு திருச்சங்க நிகழ்வில் கிழக்குத் திருச்சபையில் ஏற்பட்ட மிகப்பெரிய

ஆரியு தப்பறைக் கொள்கையிலிருந்து திருச்சபையை பாதுகாத்திட மிகவும் உறுதுணையாக நின்றவர்.

நம் திருவழிபாட்டில் இவரது திருநாளை நாம் கொண்டாடவில்லை என்றாலும் டிசம்பர் 6 ஆறாம் நாளில் இவரை நினைவு கூர அகில உலக திருச்சபை நம்மை அழைக்கிறது. நம் திருச்சபை வாழ்வில் பங்குகளில் கிறிஸ்துமஸ் பஜனை பாடச் செல்லக்கூடிய நேரத்தில் சாந்தா கிளாஸ் எனப்படும் கிறிஸ்துமஸ் தாத்தா இல்லாத பஜனைபாடல் இல்லை எனலாம். கிறிஸ்துமஸ் தினத்தன்று நடைபெறக்கூடிய சிறப்பு நிகழ்வுகளின் போதும் சாந்தா கிளாஸ் கிறிஸ்மஸ் தாத்தாவாக நம் மத்தியில் ஆலயங்களில் ஆர்வமாக நினைவுகூரப்பட்டுக் கொண்டிருக்கிறார். எனவே அவரைப் பற்றிய அறிவை பெற்றுக் கொள்ளுதல் தேவையான ஒன்றாகும்.

சாந்தாகிளாஸ் என்னும் பெயர் எவ்வாறு வந்தது? நிக்கோலஸ் என்பவர் துருக்கி நாட்டில் வாழ்ந்து வந்த பேராயர் ஆவார். இவரது புனிதமான வாழ்க்கையின் காரணமாக வாழும் போதே புனித நிக்கோலஸ் என அழைக்கப்பட்டார். புனித நிக்கோலஸ் இலத்தீன் மொழியில் சாந்தா நிக்கோலஸ் என அழைக்கப்பட்டார். சாந்தா

www.malankaralibrary.com

நிக்கோலஸ் என்னும் பெயரானது குறுகிய சொல் வழக்கில் சாந்தா கிளாஸ் என அழைக்கப்படுகிறது.

இவரை நினைவுகூரும் திருநாள் டிசம்பர் மாதம் ஆறாம் நாளில் அனுசரிக்கப்படுகிறது. கிறிஸ்து பிறப்புத் திருநாளுக்கான தயாரிப்பு காலத்தில் வருகின்ற நிக்கோலஸ் திருவிழாவானது பல்வேறு நாடுகளில் மிக முக்கியமானதாக கிறிஸ்து பிறப்பு விழாவோடு இணைந்து கொண்டாடப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் சாந்தா கிளாஸ் இல்லாமல் கிறிஸ்து பிறப்புத் திருநாளைக் கொண்டாடுவது இல்லை.

**நிக்கோலஸின் இளமை :** கிறிஸ்துவுக்கு பின் மூன்றாம் நூற்றாண்டில் துருக்கி நாட்டில் வாழ்ந்து வந்த ஒரு செல்வந்தரான தியோபனிஸ் மற்றும் நொன்னா என்ற கிறிஸ்தவ தம்பதியர் முப்பது ஆண்டுகாலம் குழந்தைக்காக இறைவனிடம் தொடர்ந்து மன்றாடி வேண்டினர். இறையருளால் அவர்களது முதிர்ந்த வயதில் நிக்கோலஸ் பிறந்தார். இளமையிலேயே விவிலியம் வாசிப்பதிலும் இறைகாரியங்கள் செய்வதிலும் நிக்கோலஸ் மிகவும் ஆர்வம் காட்டி வந்தார். ஒவ்வொரு நாளும் விவிலியம் வாசிப்பதில் ஆர்வமாக இருந்தார். ஒரு நாள்

www.malankaralibrary.com

இரவு தனது ஐந்தாம் வயதில் நீண்ட நேரம் ஆகியும் நிக்கோலஸ் விழித்திருக்க பெற்றோர் அவனை விசாரித்த போது அவர் கூறிய மறுமொழியாவது, “நான் இப்போது வாசித்துக் கொண்டிருக்கும் அதிகாரத்தை முடித்த பின்னர் தூங்க செல்கிறேன்“ப்

அடிக்கடி தனது மாமா தங்கி வாழ்ந்த துறவற ஆசிரமத்திற்கு செல்வது வழக்கமாக இருந்தது. துறவிகளோடு இணைந்து ஜெபித்திலும் பாடுவதிலும் விவிலியம் வாசிப்பதிலும் மிகவும் ஆர்வம் காட்டி வந்தார். தனது பெற்றோரிடம் இருந்து தான் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவ அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு துறவிகளிடம் இருந்து இறையியல் கற்கவும் இறை காரியங்கள் கற்கவும் விரும்பினார். எனவே தனது பதினாறாம் வயதில் துறவற ஆசிரமத்தில் தங்கி வாழத் தொடங்கினார்.

**யோனத்தானின் மகள்களுக்கு திருமண உதவி :** ஒரு நாள் ஆசிரமத்துக்கு வெளியே நிக்கோலஸ் வந்தபோது யோனத்தான் என்ற ஏழை மனிதர் துறவிகளிடம் மிகவும் வருத்தமாக பேசிக்கொண்டிருப்பதை கண்டார். பின்னர் துறவிகளிடம் யோனத்தானின் சோகமான நிலை பற்றி வினவினார். ஏழ்மையான நிலையில் தனது மூன்று மகள்களையும்

திருமணம் செய்துவைக்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பதாகவும் தனது மூன்று மகள்களையும் விற்பனை செய்ய திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தனர். அன்று இரவு நிக்கோலஸ் யோனத்தானின் வீட்டிற்கு செல்கின்றார். அவர்கள் வருத்தத்தோடு இருப்பதைக் கண்டு கண்கலங்கினார். அனைவரும் தூங்கிய பின்னர் தன்னுடைய கையில் மறைத்து வைத்திருந்த தங்கம் அடங்கிய பை ஒன்றை வீட்டுக்குள்ளே வைத்துவிட்டு திரும்பிச் செல்கிறார். அடுத்த நாளில் யோனத்தான் பெற்றுக்கொண்ட செல்வத்திற்காக கடவுளுக்கு நன்றி கூறி மூத்த மகளின் திருமணத்தை நல்ல முறையில் நடத்துகின்றார். இவ்வாறே மீண்டும் நிக்கோலஸ் உதவியால் யோனத்தானின் இரண்டாம் மகளுக்கும் திருமணம் நடைபெற்றது. மூன்றாவது மகளுடைய திருமண நிச்சயம் நடத்தப்பட்ட பின்னர் தங்கப்பையை வீட்டிற்கு கொண்டு வருவது யார் என மறைந்திருந்து கவனித்தார். அன்று இரவு நிக்கோலஸ் தனது கையில் தங்கம் அடங்கிய பையுடன் யோனத்தானின் வீட்டிற்குள் வைத்து விட்டு திரும்பும் வழியிலேயே அவனைக் கண்டு, ஏன் நீ இவ்வாறு செய்தாய்? நீ தான் இவ்வளவு

www.malankaralibrary.com

உதவிகள் எனக்கு செய்தாயோ? என்று அவர் வினவினார். நிக்கோலஸ் இவ்வாறு கூறினார்; „நீங்கள் இறைவனோடு வேண்டியதற்கு கைமாறு கிடைத்துள்ளது. இதை யாரிடமும் சொல்ல வேண்டாம்“ப் மூன்றாவது மகளின் திருமணமும் வெகு விமரிசையாக நடந்து முடிந்தது. ஆனால் யோனத்தான் தனது நண்பர்களிடமும் ஊராரிடமும் சொல்லி நிக்கோலஸின் பிறருக்கு உதவும் மனத்தை பாராட்டினார். இவ்வாறு மக்களுக்கு உதவி செய்யும் ஆர்வத்தோடு மிரா நகரில் வாழ்ந்து வந்த நிக்கோலஸ் தொடர்ந்து ஒரு குருவானவராக மாறுகின்றார்.

**ஆயராக தேர்ந்தெடுத்தல் :** ஒரு நாள் மிரா நகரின் ஆயரவர்கள் இறையடி சேர்ந்தார். மறுநாள் காலையில் வழக்கம்போல ஜெபிப்பதற்காக ஆலயத்தை நோக்கி நிக்கோலஸ் சென்றார். அதற்கு முந்தைய நாள் இரவில் லிசியா நகரத்து ஆயர் கனவொன்று கண்டார். மிரா நகரத்து ஆலயத்திற்குள் முதலாவதாக நுழையக்கூடிய நபரை மிரா நகரின் அடுத்த ஆயராக தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதாக இருந்தது. கடவுளின் திருவெளிப்பாடு என அவர் தனது கனவைப் பற்றி மக்களிடம் கூற மக்கள் அனைவரும் ஆலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் விடியற்காலையிலேயே

காத்திருந்தார்கள். கனவைப் பற்றி அறிந்திராத நிக்கோலஸ் ஆலயத்திற்குள் நுழைகின்றார். வழக்கத்திற்கு மாறாக வந்திருந்த மக்கட்கூட்டத்தைக் கண்டு வியப்படைந்தார். உடனடியாக லிசியா நகர ஆயரின் தலைமையில் மக்கள் அவரை மிரா நகரின் ஆயராக ஏற்றுக்கொண்டனர். முதலில் மறுத்த நிக்கோலஸ் பின்னர் இறைத்திட்டத்திற்கு பணிந்து ஆயராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

**பஞ்ச காலத்தில் மக்களுக்கு உணவு :** மிரா நகரில் மிகப்பெரிய பஞ்சம் ஏற்பட்ட போது தேவையான உணவு கிடைக்காமல் மக்கள் உணவுக்காக அலைந்தார்கள்.. ஒரு நாள் லைக்கா நகர துறைமுகத்தில் ஏராளமான உணவு மூட்டைகள் கப்பலில் வைத்திருப்பதாகவும். மக்கள் கெஞ்சிக் கேட்ட போதும் கப்பலோட்டி மக்களுக்கு கொடுக்கவில்லை எனவும் ஆயர் நிக்கோலஸிடம் மக்கள் தகவல் அளித்தனர். ஆயர் நிக்கோலஸ் தனது பணியாளர்களை உதவிக்காக கப்பலோட்டியிடம் அனுப்பினார். கப்பலோட்டியோ மறுத்துரைத்தார். அடுத்த நாள் நேரடியாக ஆயர் அவர்கள் மாலுமியை கண்டு கப்பலிலிருந்து தேவையான உணவு தானியங்களை மக்களுக்காக பெற்றுக்கொண்டார். தன்னுடைய

www.malankaralibrary.com

முதலாளியிடம் எவ்வாறு நான் கணக்கு காட்டுவேன் என்று மாலுமி வருந்தினார். ஆயர் நிக்கோலஸ் அவருக்கு ஆறுதல் அளித்து வழியனுப்பினார். சரக்கு துறைமுகத்தை அடைந்தவுடன் முதலாளி சரக்குகளின் எடையை அளவிடும்போது எந்த குறையும் இல்லாமல் அதே அளவு இருந்தது. முதலாளியின் பாராட்டை கப்பலோட்டி பெற்றுக்கொண்டார். இறைவனுக்கு நன்றி கூறினார். மிரா நகரத்து மக்களும் பசியிலிருந்து விடுதலை பெற்று உணவு உண்டு இறைவனைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

**விபத்தில் சிக்கிய கப்பல் :** ஒரு சில நாட்களுக்குப் பின்னர் கடலில் ஒரு கப்பல் புயலில் சிக்கிக் கொண்டது. பயணித்த நபர்கள் அனைவரும் உயிருக்காக இறைவனோடு இறைஞ்சி மன்றாடினார்கள். அப்போது இறைவன் ஆயர் நிக்கோலஸ் வடிவில் அவர்களுக்கு தோன்றினார். மாலுமியிடம் இடப்பக்கத்தை நோக்கி கப்பலை திருப்பக் கூறினார். கப்பலோட்டியும் அவ்வாறே செய்ய கப்பல் எந்தவிதமான பாதிப்பும் இன்றி துருக்கி நாட்டின் கரையை சென்றடைந்தது. பயணம் செய்த நபர்கள் அனைவரும் அவருக்கு உதவி செய்த நபரை கப்பலில் தேடினார்கள். எங்கும் அவரை

www.malankaralibrary.com

காணவில்லை. இவ்வாறு மாயமானதை அறிந்து வியப்படைந்தனர். மிரா நகரத்து பேராலயத்திற்கு சென்று இறைவனுக்கு நன்றி கூறி ஜெபிக்க சென்றார்கள். அங்கே ஆலயத்தில் ஆயர் நிக்கோலஸ் தனது மக்களோடு இணைந்து இறைவனிடம் ஜெபித்துக் கொண்டிருந்தார். கப்பலில் பயணித்தவர்கள் இவர்தான் தங்களை காப்பாற்றியவர் என்று அறிந்துகொண்டார்கள். அவர்கள் நடந்த அதிசயத்தை உணர்ந்தவாறு இறைவனுக்கு நன்றி கூறி பாடிப் புகழ்ந்தனர்.

**வட்டி வசூல் செய்தவர்களிடமிருந்து காப்பாற்றியது :** ஒருநாள் நிக்கோலஸ் வயல் வழியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது ஒரு சிறுவன் தன்னால் சுமக்க முடிந்ததை விட அதிகமாக உணவுப்பொருட்களை சுமந்து சென்று கொண்டிருந்தான். ஆயர் நிக்கோலஸ் அவனைப்பார்த்து நான் உனக்கு உதவி செய்கிறேன் என்று கூறி அவனுடைய ஒருசில பொருட்களை தானும் சுமந்து கொண்டு சிறுவனின் வீட்டை நோக்கி நடந்தனர். வீட்டை அடைந்தவுடன் அந்த சிறுவனும் அவனது தாயாரும் ஆயருக்கு நன்றி கூறினர். தகப்பனார் எங்கே என வினவிய போது, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத காரணத்தினால் அதிகாரிகளும்

வட்டிப் பணம் கொடுத்தவர்களும் கைது செய்து அவரை கொலை செய்வதற்காக கொண்டு சென்றனர் என்று வருத்தமுடன் கூறினார்கள். நிக்கோலஸ் வெகுசீக்கிரமாக அந்த நபருக்கு கொலைத் தண்டனை நடத்தக்கூடிய சரியான நேரத்தில் சென்று அதிகாரிகளோடு பேசி அந்த நபரை விடுதலை செய்தார். அதிகாரிகளும் தாங்கள் செய்த தவற்றை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டார்கள். அனைத்து வட்டிப் பணத்தையும் தள்ளுபடி செய்தார்கள்.

**சிறையில் திருக்காட்சி :** அக்காலத்தில் நிசேயா திருச்சங்கம் நடைபெற்றபோது ஆரியஸ் என்ற ஒரு குருவானவர் இயேசுவைப்பற்றி தவறான கருத்துக்களை பேசிக்கொண்டு இருந்தார். உணர்ச்சிவசப்பட்ட ஆயர் நிக்கோலஸ் அவரது கன்னத்தில் அறைந்து அவரைக் கண்டித்தார். அரசனோ ஆரியஸின் உதவியாளர்களோடு இணைந்து ஆயர் நிக்கோலஸை கைது செய்து சிறையில் அடைக்கக் கட்டளையிட்டான். சிறைக்காவலர்கள் அவருக்கான அதிகார உடைகளையும் அவரது கையிலிருந்த விவிலியத்தையும் பிடுங்கி சிறையில் அடைத்தனர். சிறையில், „இறைவா நான் செய்த தவற்றை மன்னித்து விடும்“ என ஆயர்

www.malankaralibrary.com

நிக்கோலஸ் ஜெபித்துக் கொண்டிருந்த போது இயேசு கிறிஸ்துவும் தாய் மரியாவும் அவருக்குத் தோன்றினர். அப்போது கையில் கட்டப்பட்ட சங்கிலிகள் உடைந்தன. விவிலியத்தையும், ஆயர் அதிகார உடைகளையும் இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்டார். பின்னர் சிறைக் காவலர்கள் அவரை சந்தித்த போது அதிகார உடைகளோடும் விவிலியத்தோடும், சங்கிலி உடைந்தவாறும் சிறையில் அமர்ந்திருந்ததை கண்டு வியப்படைந்தார்கள். அரசனும் அவரை நேரடியாக சந்தித்து நடந்ததை அறிந்து இறைவனில் அதிக விசுவாசம் கொண்டு அவரை விடுதலை செய்தான்.

**சிறுவர்களுக்கு உயிரளித்தது :** இவ்வாறு ஆயர் நிக்கோலஸின் பெருமையானது உலகெங்கும் பரவியது. ஆயர் நிக்கோலஸிடமிருந்து ஆசீர் பெற மூன்று சிறுவர்கள் தொலைதூர பயணம் செய்து மிரா நகரை நள்ளிரவில் அடைந்தார்கள். மிகவும் சோர்வாக இருந்த காரணத்தினால் ஓய்வெடுப்பதற்காக ஒரு கசாப்புக்காரனின் வீட்டில் தங்குவதற்கு இடம் தர வேண்டியும் அதற்குப் பதிலாக தங்கம் தருவதாகவும் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மறுநாள் ஆயர் நிக்கோலஸை அவர்கள் சந்திக்க

விரும்புவதாகவும் அவனிடம் கூறினார்கள். ஒரு அறையில் அவன் சிறுவர்களை தங்க வைத்தான். தூங்கிக் கொண்டிருந்த போது சிறுவர்களை கசாப்புக்காரன் கொலை செய்து மிகப்பெரிய பானைக்குள் உடலை போட்டு வைத்தான். அவர்கள் கொண்டுவந்த உடைமைகள் அனைத்தையும் தனதாக்கிக் கொண்டான். இவற்றையெல்லாம் ஆயர் நிக்கோலஸ் இரவில் தூங்கிக்கொண்டிருந்த போது கனவாக கண்டு கொண்டிருந்தார். இறைவனின் திருக்காட்சியே இது என எண்ணி தனது அதிகார செங்கோலோடு கசாப்புக்காரனின் வீட்டை அடைந்தார். சிறுவர்களின் உடல் எங்கே என வினவ, பயத்தினால் உடனடியாக பானைக்குள் அடைத்து வைக்கப்பட்ட சிறுவர்களின் உடல்களை காண்பித்தான். பானையின் மேல் சிலுவை அடையாளம் வரைந்தபோது அந்த சிறுவர்கள் உயிர் பெற்றனர். பின்னர் அந்த சிறுவர்களுக்கு ஆசி வழங்கி மறுநாள் காலையில் அவர்களுடைய வீட்டை நோக்கி வழியனுப்பி வைத்தார்.

இவ்வாறு பெரும்புகழோடு வாழ்ந்து வந்த ஆயர் நிக்கோலஸ் அவர்கள் தனது இறுதி காலத்தில் ஜெபங்கள் ஜெபித்துக் கொண்டும் பாடிக்கொண்டும் இருக்கும்போது தன் உயிரை இறை சந்நிதியில்

www.malankaralibrary.com

அர்ப்பணித்தார். மேற்குறிப்பிட்ட பல நிகழ்வுகளும் வரலாற்றில் இடம்பெறவில்லை எனினும் ஆயர் நிக்கோலஸ் பிறருக்கு உதவி செய்யும் தாராள குணம் கொண்டிருந்தார் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை ஆகும். அவரது இறப்பிற்குப் பின்னர் டிசம்பர் ஆறாம் நாளன்று மிரா நகரத்து மக்கள் அவருடைய நினைவு விழாவை ஆண்டுதோறும் இன்றும் தவறாமல் கொண்டாடி வருகின்றனர். இந்நாளில் சிறுவர்களும் ஏழைகளும் எதிர்பாராத விதமாக பல்வேறு பரிசுப் பொருட்களை பெற்றுக்கொள்கின்றனர். இந்த நிகழ்வினை மையமாகக் கொண்டு நிக்கோலசைப் போல பிறர் உதவி செய்யும் எண்ணம் கொண்டோர் ஆயர் நிக்கோலஸைப் போல வேடமணிந்து பரிசுப் பொருட்களை அவரது நினைவு நாளன்று பிறருக்கு வழங்கி மகிழ்கின்றனர்.

குழந்தைகளை மிக அதிகமாக விரும்பிய நிக்கோலஸ் மாலை வேளையில் மிரா நகரத்து தெருக்களில் இசைக்கருவிகளை பயன்படுத்தி பாடல்கள் பாடி குழந்தைகளை அழைத்து அவர்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ந்தார். இதன் நினைவாகவே இன்றும் நிக்கோலஸ் நீண்ட வெள்ளை நிற தாடி மீசையோடும், சிவப்பு நிறத்தில் தொப்பியும், அங்கியும் அணிந்து,

கைத்தடியுடன், தோளில் ஒரு கோணிப்பையோடு குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் பரிசுகளை வழங்கும் ஒருவராக நடனமாடி வருகிறார். இவர் வெளியே வந்து தன் கையிலுள்ள மணியை ஒலிக்கச்செய்யும் போது குழந்தைகள் இனிப்புகளைப் பெற்றுக் கொள்ள வீடுகளிலிருந்து ஓடோடி வருவர். இவ்வாறு உலக நாடுகளில் சாந்தாகிளாஸ் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமானவராக உள்ளார்.

அவரது நினைவு நாளன்று சாந்தா கிளாஸ் வடிவத்தில் சுடப்பட்ட உரொட்டி(Bread) ஒன்றை அனைவருக்கும் பகிர்ந்து உண்டு மகிழ்வர். குழந்தைகளும் இதனை விரும்பி வாங்கி உண்பர். சாந்தாகிளாஸ் உருவில் வடிவமைக்கப்பட்ட சாக்லேட் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாகும். அனைத்து விற்பனை மையங்களிலும் இவை விற்பனைக்கு உள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டே நாமும் சாந்தாகிளாஸ் என்ற பெயரில் கிறிஸ்துமஸ் காலம் முழுவதும் வேடமணிந்து பிறருக்கு பரிசுகளை வழங்கி மகிழ்ந்து வருகின்றோம்.

குமரி மாவட்டத்திலும் உலகின் பல்வேறு இடங்களிலும் சாந்தாகிளாஸ் பவனி

www.malankaralibrary.com

நடைபெறுவதும் உண்டு. ஒரு சில இடங்களில் மிகப்பெரிய சாந்தா கிளாஸ் உருவத்தை வடிவமைப்பது உண்டு. இது காண்பதற்கு மிக அருமையாகவும் குழந்தைகளுக்கு இனிமை ஊட்டுவதாகவும் அமைகின்றன. கிறிஸ்து பிறப்புத் திருநாளன்று சாந்தாகிளாஸ் வேடமணிந்த நபர்கள் நிகோலஸைப் போன்றே இசைக்கருவிகளை பயன்படுத்தி பாடல்கள் பாடி நடனமாடி பரிசுப் பொருட்களும் இனிப்புகளும் குழந்தைகளுக்கு வழங்கி மகிழ்ச்சி அடைகின்றனர். பஜனை பாடல் நேரங்களில் வீடுகளுக்கு சாந்தாகிளாஸ் செல்வது முக்கியமான வழக்கமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. வீடுகளிலும் முக்கிய சந்திப்புகளிலும் அமைக்கக்கூடிய கிறிஸ்து பிறப்பு குடில்களில் சாந்தாகிளாஸும் முக்கியமான இடத்தை பெற்றுள்ளது. இவ்வாறு கிறிஸ்து பிறப்புத் திருநாளோடு தொடர்பு கொண்ட முக்கியமான நபராக சாந்தாகிளாஸ் இன்றும் நம்மிடையே அலங்கரிக்கப்பட்டு வருகிறார்.

**ÀÃüதூய ஜாண் மரிய வியான்னி தினம்**

www.malankaralibrary.com

புனித ஜான் மரிய வியான்னி ஆர்சு கிராமத்தில் 1818 முதல் 1859 பங்குத்தந்தையாக பணியாற்றினார். இவர் மறைமாவட்ட குருக்களின் பாதுகாவலர் ஆவார். இந்த ஆர்சு கிராமத்தில் தான் தன்னுடைய புனித வாழ்க்கை வழியாக ஏராளமான மக்களை கிறிஸ்து பின்பற்றிய வழிமுறைகளுக்கும் உள்பட்டவாறு நல்வாழ்வு வாழும் வாழ்வை வாழ்ந்து காட்டினார்.

பிரான்சு நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய நகரமான லியோன் நகரிலிருந்து ஏறக்குறைய முப்பது கிலோ மீட்டருக்கு அப்பால் அமைந்துள்ள மிகவும் சிறிய ஒரு கிராமமே ஆர்சு என்று அழைக்கப்படுகிறது. இக்கிராமத்தை பிரெஞ்சு மொழியில் „ஆர்ஸ் சூர் போர்மான்ஸ்" என அழைக்கின்றனர். தற்போது இக்கிராமத்தில் சுமார் 1500 மக்கள் வாழ்கிறார்கள். இக்கிராமம் முழுவதுமே பசுமையாக காட்சி தரும் விவசாய நிலமாகவே உள்ளது. இக்கிராமத்தில் மிகவும் பழமையான மற்றும் ஏழ்மையான கட்டிட அமைப்புகளை நம்மால் இப்போதும் காணமுடிகின்றது.

www.malankaralibrary.com

புனிதர் பிறந்த சொந்த ஊரான டார்டில்லி ஆர்சு கிராமத்திலிருந்து ஏறக்குறைய முப்பது கிலோ மீட்டர் தொலைவில் லியோன் நகருக்கு அருகே அமைந்துள்ளது. டார்டில்லி ஆலயத்தில் புனிதரின் வாழ்க்கை நிகழ்வுகளை சித்தரிக்கும் பல பழங்கால நினைவுச் சின்னங்களை காண முடியும். 1786 ஆம் ஆண்டு மேய் எட்டாம் நாளில் திருமுழுக்குப் பெற்ற அக்காலத்து திருமுழுக்குத் தொட்டி இப்போதும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. மேலும் அவரது பெற்றோரின் குடும்ப வீட்டையும் நம்மால் காண முடிகிறது. தற்போது இவ்வீட்டை அருங்காட்சியகமாக மாற்றியமைத்துள்ளனர். புனிதர் தன் இளமைப்பருவத்தில் பயன்படுத்திய பொருட்களையும் அவருடைய இளமைப்பருவ வாழ்க்கைச் சூழலை விளக்குகின்ற கலை வடிவங்களையும் இங்கே பாதுகாத்து வருகின்றனர்.

ஜான் மரிய வியான்னி 1786 மே 8 டார்டில்லியில் பிறந்தார். பெற்றோருக்கு ஆறு குழந்தைகளுள் மூன்றாவது நபராக இவர்

www.malankaralibrary.com

பிறந்தார். மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அவர் சிறுவயதிலேயே இறைஆர்வத்தோடு வளர்ந்து வந்தார். இளைஞராக இருந்த காலத்தில் திருப்பலி ஒப்புக்கொடுப்பதும் கிறிஸ்தவ போதனைகளை போதிப்பதும் அரசு தடை விதித்திருந்த காலகட்டமாக இருந்தது. இருப்பினும் எல்லா தடைகளையும் தாண்டி கிறிஸ்தவ மறையில் வளர்வதற்காக தினந்தோறும் திருப்பலியில் பங்கு கொள்வதற்கு வெகுதூரம் நடந்து சென்று மறை நெறியில் வளர ஆர்வம் காட்டினார். இவ்வாறு இறை ஆர்வத்தில் செழித்திருந்த அவர் தன் விருப்பப்படியே குருமடத்தில் சேர்ந்தார். இலத்தின் மொழி படிப்பதற்கு கடினமாக இருந்ததனால் இரு முறை தோல்வியை தழுவினார். இருப்பினும் குருவாக இறைபணி புரிய வேண்டும் என்ற தனது தீராத ஆர்வத்தினால் ஆயர் அவர்களால் குருவானவராக அருள்பொழிவு செய்யப்படுகிறார்.

குருவானவராக அருள்பொழிவு செய்யப்பட்ட பின்னர் அவர் சார்ந்திருந்த

www.malankaralibrary.com

மறைமாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய மற்றும் சிறிய பங்கு எனப்பட்ட ஆர்சு கிராமத்தில் தன் பணிகளை தொடர்வதற்கு தயாரானார். அருட்தந்தை ஜான் மரிய வியான்னி ஆர்சு கிராமத்தை நோக்கி நடந்து வரக்கூடிய வழியில் மிகவும் சோர்வாக ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார். கடும் குளிர் காலமாக இருந்தமையால் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. சரியான பாதையும் அவருக்கு தெரியாமல் இருந்ததால் யாரேனும் நபர்கள் உதவிக்கு வருவார்களா என்று ஏங்கிக் கொண்டு இருந்தார். அப்போது ஆடு மேய்ப்பதற்காக வந்திருந்த சிறுவர்களை காண்கிறார். அந்த சிறுவர்களுள் ஒருவரை அழைத்து ஆர்சு கிராமத்தை நோக்கிச் செல்வதற்கான வழி தெரியுமா என்று கேட்கிறார். அச்சிறுவனும் சரியான வழியை தனது கரங்களை காட்டியவாறு அவருக்கு காண்பித்துக் கொடுக்கின்றான். அப்போது அந்த சிறுவனிடம் ஜான் மரிய வியான்னி பின்வருமாறு கூறினார், „நீ எனக்கு ஆர்சு நோக்கிய வழியைக் காண்பித்தாய், ஆனால் நான் உனக்கு விண்ணகம் செல்வதற்கான வழியை காண்பிப்பேன்“ என்று மகிழ்வோடு

www.malankaralibrary.com

கூறினார். இந்த நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் இப்போதும் அன்று நடந்த விதத்திலேயே சிற்பங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதை நம்மால் காணமுடிகின்றது.

1859 ஆம் ஆண்டு ஆகஸ்டு நான்காம் நாளில் இறையடி சேர்ந்தார். புனிதர்ப் பட்ட வழிமுறைகளுக்கேற்ப அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்ட போது உடல் முழுவதும் உலர்ந்து இருண்டு அழியாமல் இருப்பது கண்டறியப்பட்டது.

தற்போது இந்த கிராமத்தில் இரண்டு முக்கிய ஆலயங்கள் ஒன்றோடொன்று இணைந்தவாறு காணப்படுகின்றன. முதல் ஆலயமானது புனித ஜான் மரிய வியான்னி போதித்த மறைபணி செய்த ஆலயம் ஆகும். ஊர் மக்களின் ஒத்துழைப்போடு புனிதராலேயே கட்டப்பட்ட ஆலயம் எனக் கூறப்படுகிறது. இந்த பழமையான ஆலயத்தின் தொன்மை நிலை இப்போதும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. தினமும் 13 முதல் À—மணி வரை நீண்ட நேரம் புனிதர் ஒப்புரவு அருள்சாதனம் வழங்கிய ஒப்புரவு

அறையையும் இன்று நம்மால் காண முடியும். அவர் எப்போதும் தனியாக முழந்தாளிட்டு ஜெபித்த இடமும் அங்கே காண்பிக்கப்படுகிறது. எப்போதும் திருப்பலி மற்றும் பல்வேறு ஜெப வழிபாடுகள் இங்கே நடந்த வண்ணம் இருக்கின்றன. இரண்டாவது ஆலயமானது பசிலிக்கா ஆலயம் ஆகும். இங்கு புனித ஜான் மரிய வியான்னி உடல் கண்ணாடி பெட்டியில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இஃது பழைய ஆலயத்தோடு இணைந்தவாறு புனிதரின் மறைவிற்குப் பின்னர் மூன்றாம் ஆண்டில் கட்டப்பட்டது.

பழைய ஆலயத்திற்கு பக்கத்தில் ஒரு சிறிய குருசடியானது காணப்படுகிறது. „நலம்தரும் இதயத்தின் குருசடி“ எனப்படுகிறது. புனித ஜாண் மரிய வியானியின் அழியாத இதயமானது திருப்பண்டமாக இங்கே பாதுகாக்கப்படுகிறது. இப்புனிதத் தலத்தை நோக்கி வருடந்தோறும் ஏறக்குறைய ஐந்து லட்சத்திற்கும் அதிகமான திருப்பயணிகள் வந்து செல்கின்றனர்.

www.malankaralibrary.com

ஆர்சு கிராமத்தில் அவர் வாழ்ந்த வீட்டின் முன்பகுதியை பார்க்கின்றபோது நம்மூர் பழங்கால ஓட்டு வீட்டிற்குள் நுழைவது போன்ற விதத்தில் அமைந்திருக்கும். இந்த பழமையானது இப்போதும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. குருசடிக்கு அருகில் அவர் வாழ்ந்து வந்த வீடு பொது பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. அவர் பயன்படுத்திய பொருட்களும் பாதுகாக்கப்பட்டுள்ளன. அந்த வீட்டின் வடிவமைப்பும் பொருள்களும் காண்கின்ற போது தன்னுடைய வாழ்வை எவ்வாறு எளிமையாக வாழ்ந்து காட்டினார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. அவர் பயன்படுத்திய கட்டிலின் ஒரு பகுதி எரிய வைக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது. சாத்தான் அவரைச் சோதிப்பதற்காக அவர் தூங்கிக் கொண்டிருந்தபோது அவரை எரித்ததாக கூறப்படுகிறது. அவர் பயன்படுத்திய புனிதப் பொருள்களும், நூலகமும், சமையலறையில் பயன்படுத்திய பாத்திரங்களும் அங்கே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. பங்குத்தந்தைக்கான அவரது அடையாளச் சின்னங்களும், பதவி ஆடைகளும்

பாதுகாக்கப்பட்டுள்ளன. அவர் திருப்பலிக்கு பயன்படுத்திய திருவழிபாட்டுத் திருவுடைகளும், அப்பத்தட்டமும் இரசக்கிண்ணமும் தனியாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மேலும் மிகவும் பிரமாண்டமான ஆலயம் ஒன்று கீழ்த்தளத்தில் கட்டப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கானோர் உள்ளேயும் வெளியேயும் அமர்ந்து திருவழிபாடுகளில் கலந்து கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. மக்கள் குடும்பமாகவும் குழுக்களாகவும் இவ்விடம் வந்து தற்காலிக கூடாரங்கள் அமைத்து தங்கி புனிதர் வழியாக இறையருள் வேண்டுகின்றனர்.

ஆண்டு தோறும் பிப்ரவரி மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையன்று பல்வேறு பகுதிகளில் இருந்து வரக்கூடிய குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் பவனி நடத்தவும் செய்கின்றனர். இக்கிராமத்தின் பல்வேறு பகுதிகளில் அரசு புனிதரைப் பற்றிய பல்வேறு விதமான கலை வடிவங்களை

www.malankaralibrary.com

வடிவமைத்துள்ளது. ஆலயத்திற்கு மிக அருகிலேயே வாக்ஸ் மியூசியம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த மியூசியத்தினுள் புனிதரின் வாழ்க்கையில் நடைபெற்ற 17 முக்கிய நிகழ்வுகளை மெழுகு வடிவில் செதுக்கி வைத்துள்ளனர். இது காண்போருக்கு புனிதரை பற்றி மிகத் தெளிவாக அறிந்து கொள்வதற்கான உபாதியாக அமைந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கான ஆடம்பரமான நட்சத்திர ஹோட்டல்கள் எதுவும் இவ்வூரில் இல்லை. அமைதியான சூழ்நிலை ஆன்மீக நிலையை தூண்டுவதாக அமைந்திருக்கும். தற்போது இவ்வூரில் பல தியான இல்லங்களும் துறவற இல்லங்களும் காணப்படுகின்றன. ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள வீடுகளின் வடிவங்களும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் காண்கின்ற போது அன்றைய கிராமத்து வாழ்வின் படிநிலைகளை உணர்ந்து கொள்ள முடியும்.

புனித ஜாண் மரிய வியானியைப் போன்ற மறைப்பணி ஆர்வமும் இறைபக்தியும் நாமும் வாழ்வில் பெற்றிட

www.malankaralibrary.com

இப்புனிதரின் பரிந்துரை வேண்டி மன்றாடுவோம்.

www.malankaralibrary.com

## துணை நின்றவை


1. More than 300 web pages are refered to collect materials.
2. Malankara Details are based on Liturgical Calender and Liturgical Texts in Tamil.
3. heiligenlexikon.de/BiographienN/Nikolaus_von_Myra
4. G.Chediath, „Die Malankara Katholische Kirche“, Kottayam 2012.
5. The Director, „Indian Church History”, Alpha Institute of Theology and Science, Tellicherry, 2016.
6. The Sacred Lectionary (English, Malayalam, Tamil), The Syro-Malankara Catholic Church, 2017-2018 and 2018-2019.
7. தமிழ்க் கலைச்சொற்கள் திருச்சபை சட்டத்தொகுப்புடன் இணைந்த பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.
8. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் தேடல் வெளியீடு, திருச்சி, 2006.

www.malankaralibrary.com


9. திருச்சபைச் சட்டத் தொகுப்பு, தேடல் வெளியீடு, திருச்சி, 2005
10. திருவிவிலியம், TNBCLC, Tindivanam 2016
11. திருச்சபை வரலாறு (Downloaded from http://bibleintamil.com Thiruchabai Varalaru, ஜனவரி 2017)ü
12. திருச்சடங்கு முறை (Thookkasa), Major Archiepiscopal Curia oft he Syro Malankara Catholich Church, Trivandrum 2014ü
13. மறைக்கல்வி பாடங்கள், வகுப்புக்கள்: Ǭ,0ţœ,–,—,“ ,” ,À…மலங்கரை கத்தோலிக்க ஆயர் மன்றம் மறைக்கல்வி பணிக்குழு, திருவல்லா, Ã…..– முதல் 2016.
14. மலங்கரை கத்தோலிக்க திருவழிபாட்டு நூல்கள்.
15. மரிய ஜாண், „திருச்சபைச் சுவடுகள்“, குமரி மலங்கரைப் பதிப்பகம், மார்த்தாண்டம், 201” ü
16. https://www.britannica.com/biography/Saint-Simon-the-Apostle
17. http://anbinmadal.org (Tamil Catholic Website based on Scripture)
18. http://bibleintamil.com/ (Official Website for Thiruviviliam and related Church Documents)
19. http://saintscatholic. blogspot.de/p/saint-index_22.html (Catholic Saints Website)

www.malankaralibrary.com

20. http://www.aquinasonline.com (Details collected for Angels)
21. http://www.catholic.org/saints/angels/
22. http://www.newadvent.org/cathen/12272b.htm
23. http://www.roman-catholic-saints.com/
24. http://www.tamilbiblestudy.org/
25. https://press.vatican.va/content/salastampa/en/bollettino/ pubblico/ 2017/04/06/170406e.h
26. https://www.biblicalarchaeology.org/daily/people-cultures-in-the-bible/people-in-the bible/the-apostle-peter-in-rome/
27. https://www.britannica.com/topic/Eastern-rite-church
28. https://www.christian-history.org/list-of-all-popes.html
29. https://www.ewtn.com/expert/answers/catholic_rites_and_churches.html
30.

www.malankaralibrary.com

